DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1371 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 15, 2022

# "இலங்கை மக்கள் கோட்டாபய ராஜபக்சாவை பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதியாகவே தற்போது கருதுகின்றார்கள்'' என்கிறார் சட்டத்தரணி



"இலங்கை மக்கள் கோட்டாபய ராஜபக்ச என்பவரை பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதியாகவே தற்போது கருதுகின்றார்கள். எனவே இலங்கையின் அரசியற் சட்டத்தின்படி அதை கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தின் சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு தெரிவித்துள்ளார் சட்டத்தரணி சுனில் வடகல அவர்கள். ஜாதிக ஜன பலவேகய (ஜேஜேபி) அமைப்பின் சட்டத்தரணிகள் குழாத்தின் முக்கிய பொறுப்பாளராக விளங்கும் அவர் இந்த விடயத்தில் இலங்கையில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் இந்த சட்டப்போரில் எமக்கு ஆதரவு தர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று சட்டத்தரணி சுனில் வடகல அவர்கள் கொழும்பில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கோதபாய ராஜபக்ச விடயம் தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில். கோட்டாபாய ராஜபக்ச ஒருபோதும் இலங்கையின் அரசியலமைப்பைப் பாதுகாக்கவில்லை எனவும், அரசியல் அமைப்பை அவர் அப்பட்டமாக மீறியதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜாதிக ஜன பலவேகய (ஜேஜேபி) சட்டத்தரணிகள் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்தின் ஊடாக நியமிக்க முடியும் எனவும் இதற்கு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.





கோட்டாபய ராஜபக்ச பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்காததன் அடிப்படையில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்குமாறு அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அரச துறை ஊழியர் ஒருவர் 24 மணி நேரத்திற்குள் துறைத் தலைவருக்குத் தெரிவிக்காமல் வேலைக்குச் செல்லவில்லை என்றால், துறைத் தலைவர் அந்த ஊழியரை பணிநீக்கம் செய்ய முடியும். அவ்வாறான சட்டங்கள் பொதுமக்கள் சார்ந்து இருக்கும் போது தவறு செய்த ஜனாதிபதிக்கு ஏன் தண்டனை வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி சுனில் வடகல அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில் "அதேபோன்று தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு சபாநாயகரே பொறுப்பு என்றும். நிர்வாகம் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு சாதகமாக செயல்பட்டு அப்பாவி மக்களின் வாழ்க்கையை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும். தற்போதைய நிலைமை போராட்டம் மக்களால் உருவாக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் உருவாக்கப்பட்டதாகவும்.

கோட்டாபாய ராஜபக்ச மக்களால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் அதேநேரம் ஜனாதிபதியின் பதவி விலகல் குறித்து சபாநாயகர் பொதுமக்களுக்கு தெரிவிக்கவில்லை. இது பெரிய அரசியல் குற்றமாகும்.

எனவே, அரசியலமைப்பின் பிரகாரம் சபாநாயகர் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டி புதிய ஜனாதிபதியை நியமிக்க வேண்டும் என்பதை நாம் இயல்பாகவே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். இதேவேளை ரணில் விக்ரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக அல்லது ஜனாதிபதியாக நியமிப்பதை சட்டம் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சட்டத்தரணி சுனில் வடகல அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# NO SMOKE ALARM NO CHANCE

Test your smoke alarms **MONTHLY.**
It could save your and your family's life.




905.458.5580
bramptonfire.com
firelife@brampton.ca
BramptonFire
@BramptonFireES
BRAMPTON

# FRONTLINE COMMUNITY CENTRE

## TRIP TO VAL-MORIN TEMPLE!







**July 17, 2022**
**1:00 AM -10:30 PM**

**Cost : $150/person**
*Price includes transportation and meal

Val-Morin Chariot Festival
&
Saint Joseph's Church

Pickup and Drop-Off Location:
Frontline Community Centre
3031 Markham Road, Unit 27
Scarborough, ON
M1X 1L9
info@fcccanada.org

CALL (416)-840-4425 TO REGISTER!


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### Help Wanted

**Part time kitchen helper and dishwasher wanted.**

**Part time wait staff for banquet party wanted.**

**Markham (Woodbine & Steeles)**
**Call Amar : 416-988-9518**

### ROOM for RENT

Eglinton / McCowan சந்திப்பிற்கு அருகில் detached வீட்டொன்றில் அறை வாடகைக்கு உண்டு.
Close to GO Train, NoFrills, Wallmart & many convenient stores.
Rent: $750 (Utilities included)
Parking lot will be provided. Females ONLY.

Address: 43 Blue Lagoon Crt
Scarborough, ON, M1J3M3


Contact: (437) 235-6130
(647) 656-8544

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice
RAJAN: 416-464-2415



### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 — Email: atsinlaw@gmail.com

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Bloomington & McCowan**

**Stouffville** நகரில் உள்ள **Golf Club** இற்கு **Cook & Dishwasher** உடனடியாக தேவை.
**Full tie or Part time.**

**Please call or text : Ravi**
**416-909-9651**

உதயன் கதிரோட்டம்

# தென்னிலங்கைப் போராட்டங்கள் தேசத்தின் நலன் கருதியே இடம்பெறுகின்றனவா?

இலங்கையின் தென்பகுதியிலும் தலைநகராம் கொழும்பிலும் நடைபெறும் மக்கள் போராட்டங்கள் என்ன நோக்கத்திற்காக நடைபெறுகின்றன என்பதை கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கும் உள்ளதா என்பதைப் பற்றிய கேள்வியை எழுப்பு அதற்கான ஒரு கலந்துரையாடலை தொடர்வதே சிறந்த வழி என்பதை ஆராய்வது தொடர்பாக இவ்வார கதிரோட்டத்தை படைக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகின்றது.

இலங்கையின் மக்கள் தொகையில் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளவர்களில் தொழிலாளர்கள் விவசாயிகள் நடுத்தர வர்க்கம சார்ந்தவர்கள் இருக்கையில் நாட்டில் ஆட்சி செய்யும் அதிகாரத்தை தங்கள் கைகளில் தொடர்ச்சியாக வைத்துக்கொள்ளும் சில குழுக்கள் அவற்றிக்கு கட்சிகள் என்ற பெயரிட்டுக் கொண்டு நடத்தும் நாடகங்களே. நாட்டில் இவ்வாறான ஒரு பொருளாதார வீழ்ச்சியை அல்லது பின்னடைவை திடீரென கொண்டு வருவதற்கு காரணமாக அமைந்துள்ளன என்பதை எண்ணும் பாதிக்கப்பட்டவர்கள் கொதித்தெழுவது நியாயமானதா என்பது பற்றி நாம் நிதானமாக சிந்திக்க வேண்டும்.

புரட்சி என்றால் ஏதேனும் ஒரு கொள்கையோடு நடத்தப்பட்டிருக்க வேண்டும். இங்கே கிளர்ச்சியாளர்கள் பொருளாதார நெருக்கடி, எரிபொருட்கள் இல்லாமை போன்ற காரணங்களை முன் நிறுத்தி கோட்டாபயவுக்கு எதிரான கிளர்ச்சிகளை நடத்தியுள்ளனர் என்ற விடங்களை மக்கள் மத்தியில் பரப்பும் முயற்சியில் பொருளாதார சீரழிவிற்கு காரணமானவர்களின் அணிகள் செய்யத் தொடங்கியுள்ளன.

முதலாளித்துவ கட்டமைப்பிற்குள் சாதாரண மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாது என்ற உண்மையை இலங்கையின் அண்மைக் கால சம்பவங்கள். மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள கஸ்டங்கள் ஆகியன நிரூபித்துள்ளன என்பது வெளியப்படையாகவே தெரிகின்றன.

இது வரை காலமும் அரசாங்கத்தையும் ஆட்சியில் உள்ளவர்களையும் மக்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற எண்ணத்தில் இருந்தவர்களுக்கு தங்களால் தெரிவு செய்யப்பெற்றவர்கள் தங்கள் வாழ்க்கையை செப்பனிட தவறிய அதே நேரத்தில் மக்களை சீரழிவிற்குள் தள்ளிவிட்டு தாங்கள் மாத்திரம் அரசின் வளங்களை பயன்படுத்தியும் சலுகைகளை கைவிட்டு விடாமலும் சுகபோகங்களை அனுபவிக்கும் உயர்ந்த நிலையில் உள்ளார்கள் என்பதை மக்கள் நிதர்சனமாகத் தெரிந்து கொண்டார்கள். இதனால் தோன்றிய "எழுச்சியே" தற்போதைய போராட்டம் என்பதை இலங்கை மக்கள் தொகையில் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் அறிந்து கொண்டார்கள்.

அரசியல் பதவிகள் மூலம் தங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டு சுகபோகத்தையும் பலத்தையும் தொடரலாம் என்ற எண்ணத்தில் இருந்தவர்களுக்கு ஒரு பலத்த அடியாகவே நாம் இந்த நாட்களைப் பார்க்க வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் மாத்திரம் மக்களுக்கு சேவை செய்யாமல் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் வாழ்க்கை தரத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் அதேவேளையில் பொது மக்கள் பட்டினியால் வாடவும் தகுந்த தொழில் வாழும் இல்லங்கள் இல்லாமல் வாடவிடவும் காரணமாக உள்ளவர்களையும் அந்த அரசியல் முறைமை ஒன்றையும் தகர்க்க நினைப்பதில் என்ன தவறு உள்ளது என்பதை மக்கள் கேள்வியாக முன்வைக்கத் தொடங்கியுள்ளார்கள். இதுதான் தற்பொழுது இடம் பெற்ற ஒரு அதிரடியான மாற்றம் ஆகும். மாற்றங்கள் தொடர்ந்து இடம்பெறாமல் நாட்களைக் கடத்தி மீண்டும் அதே "கும்பல்" ஆட்சி பீடத்தில் அமர்ந்து "குடும்பங்களாக கும்மாளம் போடும்" ராஎண்ணத்துடன் இராஜபக்ச குடும்பங்கள் காத்திருக்கின்றன என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது.

எனினும் ராபச்சா குடும்பங்களை துரத்திவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்ற கருத்தையே இந்த போராட்ட அணியில் உள்ளவர்கள் முன்வைக்கின்றார்கள் என்ற தவறான கருத்தை சிலர் தங்கள் ஆதரவாளர்கள் மூலம் மக்கள் மத்தியில் போதித்திருக்கிறார்கள். தற்போது பதில் ஜனாதிபதியாக பதவியை தக்க வைத்துள்ள ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவரது நீண்ட நாள் ஆசை நிறைவேறியுள்ளதையும் மீண்டும் ராஜபக்ச குடும்பத்தினர் ஆட்சியில் ஆபத்துக்கள் எதுவும் இல்லாமல் இருக்கவும் ரணில் உதவப்போகின்றார் என்பதை இனிவரும் நாட்கள் எமக்கு உணர்த்தப் போகின்றன.

ஆனால் இந்த நேரத்தில் வடக்குக் கிழக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்த போராட்டங்கள் ஆரம்பமானப் பின்னர் இதய சுத்தியுடன் பல நகர்வுகளை கையாண்டிருக்கலாம்.

தமிழர் பிரதேசங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஒன்றுகூடி அரசியல் பிரகடணம் ஒன்றைச் செய்திருக்கலாம். அதாவது ஒன்பதாம் திகதியோடு இலங்கை அரசியல் யாப்பின் நியாயத்தன்மை உறுதிசெய்யப்பட்டுள்ளது என்பதை எமது மக்களுக்கு தெவித்து அதை மக்கள் சிந்தனைகளுக் விட்டிருக்கலாம்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வெளியேற்றுவதற்காக மாத்திரம் இந்தப் போராட்டம் நடத்தப்படவில்லை என்று கூறியுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இடைக்கால அரசாங்கத்தின் கீழ் நாட்டை விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வந்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற தேர்தலுக்கு செல்ல வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் உண்மையான விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகளை தற்போதைய நாடாளுமன்றம் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனவும், புதிய ஆணைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு குழுவே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இன்னமும் கொண்டுள்ளது. இந்த நாடாளுமன்றத்தை அமைப்பது நாட்டை ஸ்திரப்படுத்தவும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் உதவாது. குறுகிய காலத்திற்கு இடைக்கால அரசாங்கம் அமைத்து நாட்டை மீண்டும் கொண்டு வர வேண்டும். சகஜநிலைக்கு பின்னர் தேர்தலுக்கு செல்ல வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவரது கூற்றையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தற்போது ஜனாதிபதி பதவியை "சுவைக்கத் தொடங்கியுள்ள" இந்த ரணில் பதவியை விட்டு ஓடிச் செல்ல பின்னர் ஜனாதிபதியாகம் பிரதமராகவும் வரப்போகின்றவர்களும் ராஜபக்சாக்களின் வழி வந்தவர்களாகவே இருந்து நாட்டை நாசம் செய்வார்கள் என்பதே உண்மை.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



**Construction Workers Hiring Now**

We are looking for a **Layout Assistant** for high-rise building to join our extraordinary Team at Advik Construction in Downtown TORONTO.

Term of employment: Full Time

Schedule:
• 8 hour shift
• Monday to Friday

Start date: Soon As Possible

**Salary: $18 to $25 per hour**

**Qualification / Skills:**
• Physical strength
• Math proficiency
• Problem-solving skills
• Teamwork
• Ability to use tools
• Leadership
• Undertake necessary training
• Prioritize your safety
• Learn new skills
• Coordination
• Time management

**Education:**
• Minimum a High School Graduate in Canada or outside Canada.

**CONTACT DETAILS:** If you are interested in this opportunity, please send your resume and apply now.
Contact by: **bee24.7@hotmail.ca**
**(416) 786-5504**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் போக்குவரத்து சேவைகள் தடைப்பட்ட மையினால் கொதிப்படைந்த மக்கள்

## வேடிக்கை பார்த்த போலீசார்



மன்னாரில் செவ்வாய்க்கிழமை (12) காலை முதல் மன்னார் தனியார் பேருந்து சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக மக்கள் பாரிய அளவில் பாதிக்கப் பட்டனர்.

அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது பேருந்துகள் ஊடாக வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மக்களுக்கும் தனியார் பேருந்து சங்கத்தினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டதோடு, அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பேருந்துகளை வீதியின் இடை நடுவில் நிறுத்தியமைக்கு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு, குறித்த தனியார் பேரூந்துளை அவ்விடத்தில் இருந்து அகற்றி அரச போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் சுமுகமான போக்கு வரத்துச் சேவையை முன்னெடுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நீண்ட நேரம் பேருந்துக்காக காத்திருந்த மக்கள் கொதிப்படைந்த நிலையில் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் வீதியை மறித்து தரித்து நின்ற தனியார் பேருந்துகளை அகற்ற முயற்சி செய்தனர்.

பின்னர் மக்கள் குறித்த பேருந்துகளை அவ்விடத்தில் இருந்து அகற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.பின்னர் குறித்த தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் குறித்த பேருந்துகளை அவ்விடத்தில் இருந்து எடுத்துச் சென்றனர். அதனை தொடர்ந்து நீண்ட நேரத்தின் பின் அரச போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம் பெற்றது.

எனினும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் பொது மக்களை பாதிக்காத வகையில் முன்னெடுத்திருக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட டீசலில் மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பேருந்துகளுக்கும் வழங்குமாறு உரிய தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மையில் வழங்கப்பட்ட டீசலில் தற்போது வரை 2413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் அதனை தொடர்ந்து டீசல் எவையும் தனியார் பேருந்துகளுக்கு வழங்கவில்லை. தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி காலை தனியார் பேருந்துகள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதோடு அரச போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாத வகையில் தனியார் பேருந்துகளினால் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதோடு தமக்கான எரிபொருளையும் வழங்க கோரிக்கை விடுத்தனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சிறிது நேரம் முழுமையாக பாதிக்கப்பட்டதோடு மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். இந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது. குறித்த கலந்துரையாடலில் பிரதேசச் செயலாளர், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்து சபையின் எண்ணைக் குதங்களில் இருந்து தனியார் பேருந்து சேவை பேருந்துகளுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டிற்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும், 13,200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லிட்டர் டீசல் தனியார் பேருந்து சேவை பேருந்துகளுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. திங்கட்கிழமை (11) கிடைக்க பெற்ற எரிபொருள் தனியார் பேருந்து சங்கத்தினருக்கு பகிர்ந்து வழங்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினரிடம் அவர்கள் வினவிய போதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை. இந்த நிலை செவ்வாய்க்கிழமை (12) காலை முதல் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் போக்குவரத்து சேவையை இடை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



செவ்வாய்க்கிழமை(12) காலை முதல் வீதி மறிப்பு உட்பட பொதுமக்கள் பாதிக்கப்படும் வகையில் மன்னார் பஸார் பகுதியில் சம்பவம் இடம் பெற்ற போதும் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இடம்பெற்ற பிரச்சினைகளை வேடிக்கை பார்த்ததோடு, தடுக்க முயற்சிகள் எவையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (12-07-2022)

# திருமலை மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகளில் ஏழு திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைப்பு




அவுஸ்ரேலியாவில் இயங்கும் வன்னி ஹோப் மற்றும் ஐக்கிய இராஜியத்தில் இயங்கும் இரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் பின்தங்கிய கிராமங்களில் உள்ள ஏழு பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் தாபித்து அவற்றினை பாடசாலைகளுக்கு உத்தியோகபுர்வமாக கைளிக்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரன் தலமையில் இடம்பெற்றது.

திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆதிகோனேஸ்வரா மகா வித்தியாலயம், குளக்கோட்டம் தமிழ் வித்தியாலயம், முத்துநகர் முஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலை, முள்ளிப்பொத்தானை விக்னேஸ்வரா வித்தியாலயம், பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம், கண்ணியா இராவணேஸ்வரா வித்தியாலயம் மற்றும் கோபாலபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய ஏழு பின்தங்கிய பாடசாலைகளுக்கு தலா ஆறு இலட்சம் பெறுமதி கொண்ட திறன் வகுப்பறைகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிராமப்புரங்களில் டிஜிட்டல் கல்விய அனைவரும் பெற்றுக் கொள்ளவேண்டும் எனும் நோக்குடன் வழங்கப்பட்ட திறன்வகுப்பறை திறப்பு விழா நிகழ்வில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் மாலதி வரன் ஆகியோர் உட்பட பாடசாலை அதிபர்பர்கள், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன்புரி உறுப்பினர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் தனியார் பேரூந்து உரிமையாளர்கள் பணிபுறக்கணிப்பு

## போக்குவரத்து பாதிப்பு



மன்னார் தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் எரிபொருள் கோரி புதன்கிழமை (13) பணி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் தனியார் பேரூந்து சேவை, மற்றும் அரச போக்குவரத்து சேவையினருக்கும் இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக மன்னார் போக்குவரத்து சாலை தனியார் பேரூந்துகளுக்கு வழங்க வேண்டிய டிசலை வழங்காத நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை வீதிகளை மறித்து மன்னார் தனியார் பேரூந்து உரிமையாளர்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த பிரச்சினையில் தலையிட்டு நேற்றைய தினம் மாலை 13,200 லீற்றர் டீசல் மன்னார் சாலைக்கு வழங்கிய நிலையில் மாவட்ட செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 5000 லீற்றர் டீசல் மன்னார் தனியார் சேவையினருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தார்.

இருந்த போதிலும் நேற்றைய தினம் தனியார் பேரூந்துகளுக்கு எரிபொருள் உரிய விதத்தில் கிடைக்காத நிலையில் இன்றைய தினம் முழுமையாக பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக உள்ளூர் மற்றும் வெளியூர் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் அரச பேரூந்துகளுக்காக நீண்ட நேரம் காத்திருந்ததுடன் அதிகளவான மக்களுடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தனியார் பேரூந்து உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக இன்று மன்னார் போக்குவரத்து சாலையில் தனியார் பேரூந்துகளுக்கான எரிபொருள் விநியோகிக்கப்படுவதை தொடர்ந்து நாளைய தினம் தனியார் பேரூந்து வழமை போன்று சேவைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

13-07-2022



# தமிழ் மக்கள் ஆழ சிந்தித்தாக வேண்டும்

**- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்**

- தென்னிலங்கையும் தமிழ் மக்களும் சுட்ட மண்ணும் பச்சைமண்ணுமாகவே உள்ளனர்

**வ**டக்கும் கிழக்கும் மலையகமும் தென்னிலங்கையுடன் சுட்ட மண்ணும் பச்சைமண்ணுமாகவே இன்றும் உள்ளது. இன்று இலங்கை எதிர் கொள்கின்ற பாரிய அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் இணைந்து பயணிப்பதென்பது கானல் நீராகவே இருக்கின்றது. இனங்களுக்கிடையிலான அச்ச நிலை நம்பிக்கையீனம் புரிந்துணர்வு இன்மை என்பன இலகுவில் துடைத்து எறியப்படக் கூடியதொன்றல்ல என்பதை இன்றைய யதார்த்தமும் உணர்த்துகின்றது.

இன்றைய நெருக்கடிக்கு மத்தியில் துணைக்கு தமிழ் மக்களை அழைத்து இணைத்துக் கொள்ள தென்னிலங்கை தயாராக இருக்கின்றது. ஆனால் தமிழர் விவகாரத்தைக் கணக்கில் எடுப்பதற்கோ சமரசம் காண்பதற்கோ தயாராக இல்லை என்பதுதான் தென்னிலங்கையின் உள்ளக்கிடக்கையாக உள்ளது.

மொத்தத்தில் கூறுவதாயின் தென்னிலங்கை அரசியல் சக்திகளிடம் இருந்தோ அல்லது பெரும்பான்மை மக்களிடம் இருந்தோ தமிழர் விவகாரம் குறித்து தெளிவான சமிக்ஞை கிடைப்பதாகத் தெரியவில்லை. இன்றைய நிலையில் கூட தென்னிலங்கை தமிழ் மக்கள் தமது தலை விதியை தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்ற செய்தியைத்தான் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதாகவே உள்ளது. அதாவது அனைத்து இலங்கை மக்களுக்கும் தலைமை தாங்கும் ஆளுமை தகைமை தார்மீக அரசியல் நிலைப்பாடு என்பன தெற்கில் உள்ள எந்த அரசியல் சக்திக்கும் இல்லை என்பதுதான் உண்மையாகும்.

மறுபுறம் தமிழர்களுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலை முன் வைத்து தென்னிலங்கையை திசை திருப்பி ராஜபக்ஷக்கள் குளிர்காய முயல்கின்றனர்.

அதேவேளையில் நிலைமை கட்டுமீறிப்போகாது தடுத்து நிறுத்துவதுடன் ஒரு சில அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் தென்னிலங்கையின் கொதிநிலைக்குள் மக்களை சமரசம் காண வைப்பதுடன் ராஜபக்ஷக்களையும் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கத்தினரையும் காப்பாற்றும் அரசியலை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ போன்றோர் வேகமாகச் செயற்படுகின்றனர்.

ராஜபக்ஷ அணியினர் தற்போது முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேராவை முன்னிறுத்தி அரசியல் காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டனர். பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலதிகமாக வகிக்கின்ற நிதி அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டுமென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேரா பகிரங்கமாகவே அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பானது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன தரப்பினரினதும் அங்கீகாரமும் ஆசிர்வாதமும் இன்றி நடைபெற்றிருக்காது.

அதாவது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ தரப்பினர் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கென மக்கள் தரப்பில் இருந்து எழும்புகின்ற கோ'ங்களுக்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கல்தா கொடுத்துவிட்டு அமைச்சர் தம்மிக பெரேரா மூலம் இன்னொரு முலாம் பூச காய் நகர்த்த முயற்சிப்பதாகத் தெரிகின்றது.

ஆனால் சற்று அடங்கி இருந்த தென்னிலங்கை கொதி நிலை மீண்டும் எரிமலையாக குமுறத் தொடங்கிவிட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து முழுமையான முறைமை மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதியும் அரசாங்கமும் இராஜினாமா செய்வதோடு புதிய இடைக்கால நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக இலங்கையின் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் நான் அன்புடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவர்கள் இனி பதவியில் நீடிப்பதற்கு தார்மீக உரிமை இல்லாததால் பொறுப்பை ஏற்று தங்கள் பதவிகளில் இருந்து அவர்கள் விலக வேண்டும். இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு மேலும் துன்பத்தை ஏற்படுத்தாமல் அதிகாரத்தை மீண்டும் மக்களிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என அறிவித்துள்ளார்.

மகா சங்கத்தினரும் தென்னிலங்கை மக்களின் போராட்டத்துடன் கைகோர்த்துப் பயணிக்க களம் இறங்கியுள்ளனர்.

மொத்தத்தில் தமிழர் தரப்பின் முழமையான ஆதரவின்றி தென்னிலங்கை தமக்கான தீர்வினை அடைந்து கொள்வதற்கான களமே விரிந்து கிடக்கின்றது. ஆனால் அந்தத் தீர்வானது தமிழர்களுக்கான சவாலாக தென்னிலங்கை பிரசவிக்கின்ற குழந்தையாக இருக்கலாம். அது தென்னிலங்கையின் இனவாத முகத்தின் இன்னொரு கூட்டுக் கலவையுடன் பிறப்பதாகவே அமையும்.

வழமை போன்றே தென்னிலங்கை தலைமைகள் பிரிந்து நின்று தமது இலக்கை அடைந்து கொள்ள முயற்சிக்கின்றன. ஆனால் மக்கள் ஓரணியில் திரண்டு நிற்கின்றனர். இந்தப் பிளவுக்குள்ளும் தென்னிலங்கை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பம் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கம் தற்போது இவர்களுக்காக துணை நிற்கும் பிரதமர் ரணில் விகரம சிங்க அணைவரும் வெளியேற வேண்டும் என்பதில் ஒற்றுமையுடன் ஓரணியில் நிற்கின்றனர். இது காலத்தின் தேவை என்பதை தென்னிலங்கை சரியாகக் கணித்துள்ளது.

ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்த் தலைமைகள் இன்றும் பிரிந்த நின்று தத்தமது அரசியல் நலன்களுக்காக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். தென்னிலங்கை வேற்றுமைக்குள் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றனர். இந்த ஒற்றுமை தமிழ்த் தலைமைகளிடம் தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றுவதில் காண முடியாது உள்ளது. இது பற்றி தமிழ் மக்கள் ஆழ சிந்தித்தாக வேண்டும்.

Email : vathevaraj@gmail.com


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கோட்டபாய அரசையும், கோட்டாபய ராஜபக்ஸவையும் வீட்டிற்கு அனுப்புவதன் ஊடாகவே இக்கட்டான சூழலுக்கு ஒரு இடைக்கால தீர்வு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## மன்னார் நகர பை உறுப்பினருமான எஸ்.ஆர்.குமரேஸ்



தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்கின்ற வகையில் நாமும் இந்த போராட்டங்களுக்கு ஆதரவு செலுத்தி கோட்டபாய அரசையும், கோட்டாபய ராஜபக்ஸ வையும் வீட்டிற்கு அனுப்புவதன் ஊடாகவே இக்கட்டான சூழலுக்கு ஒரு இடைக்கால தீர்வு வரும் என்கின்ற நம்பிக்கையில் இந்த போராட்டத்திற்கு பூரண ஆதரவை நாங்கள் மாத்திரம் இன்றி அனைவரும் வழங்க வேண்டும் என்பது இலங்கையர் அனைவரினதும் கடமையாகவும் எதிர்பார்ப்பதாகவும் உள்ளது என ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் மாவட்ட அமைப்பாளரும்,மன்னார் நகர பை உறுப்பினருமான எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

அவர் வெள்ளிக்கிழமை (8) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை திரு நாடானது இன்று அழிவு நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. குறிப்பாக விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் மீன் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் எதையும் செய்ய முடியாத நிலையில் மிகவும் ஆபத்தான சூழல் உருவாகி உள்ளது.

அந்த அடிப்படையில் இன்று அந்த சூழலை உருவாக்குவதற்கு காரண கர்த்தாவாக இருந்த இந்த அரசும் தற்போதைய ஜனாதிபதியும், பிரதமர் மற்றும் ஆட்சியாளர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக தமது பதவிகளிலிருந்து இராஜினாமா செய்து மக்களின் நல்வாழ்வுக்காக இவர்கள் வீடு சென்று புதிய இடைக்கால சர்வ கட்சிகளைக் கொண்ட நிர்வாக அலகை, ஓர் அரசை அமைப்பதன் ஊடாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு ஓரளவேனும் ஒரு தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதி அவர்கள் தொடர்ந்தும் விடாப்பிடியாக தான் வீடு செல்ல மறுத்து கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இன்று ஒட்டுமொத்த இலங்கை மக்களும் இணைந்து தற்போதைய போராட்டங்களில் இணைந்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் முற்று முழுதாக இந்த போராட்டங்களை ஆதரித்து நிற்கின்றார்கள்.

தமிழ் மக்களை பிரதி நிதித்துவப்படுத்துகிற கட்சி என்கின்ற வகையில் நாமும் இந்த போராட்டங்களுக்கு ஆதரவு செலுத்தி கோட்டபாய அரசையும், கோட்டபாய ராஜபக்ஸவையும் வீட்டிற்கு அனுப்புவதன் ஊடாகவே இக்கட்டான சூழலுக்கு ஒரு இடைக்கால தீர்வு வரும் என் கின்ற நம்பிக்கையில் இந்த போராட்டத்திற்கு பூரண ஆதரவை நாங்கள் மாத்திரம் இன்றி அனைவரும் வழங்க வேண்டும் என்பது இலங்கையர் அனைவரினதும் கடமையாகவும் எதிர்பார்ப்பதாகவும் உள்ளது.

அந்த வகையில் போராட்டங்கள் வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாம் மீள வேண்டுமாக இருந்தால் புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு மிக மிக அவசியமாக உள்ளது.

வெறுமனவே புலம் பெயர் தமிழர்கள் இலங்கையில் தமது அபிவிருத்திகளை மேற்கொள்ளுவதற்கு இலங்கை அரசாங்கத்தை நம்பி அவர்கள் சிறிதேனும் முயற்சிகளை மேற்கொள்ள மாட்டார்கள்.

அவர்கள் தமிழ் பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் இங்கே மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும். மாகாண சபைக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். புலம் பெயர் தேசத்தில் இருந்து வரக்கூடிய நிதிகளை மாகாண சபை கையாளக்கூடிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

அதற்கு வர இருக்கின்ற சர்வ கட்சி அரசு துணையாக இருந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வேண்டி மாகாண சபைக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதன் ஊடாக புலம்பெயர் மக்களின் நிதிகள் இங்கே கொண்டு வரப்பட்டு அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டு இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு மாகாண சபை அதிகாரங்கள் எமக்கு உதவியாக இருக்கும்.

அடிப்படையில் மாகாண சபை தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அதன் ஊடாக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு எட்டப்படும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள முடியும்.தற்போது நாட்டில் இடம் பெற்று வருகின்ற போராட்டங்கள் தமிழர்கள் ஆதரவு வழங்குவதா? அல்லது தமிழ் கட்சிகள் ஆதரவு வழங்குவதா? என்கிற விவாதங்களுக்கு அப்பால் உண்மையில் கோட்டாபாய ராஜபக்‘ வீடு செல்ல வேண்டும். போராட்டங்கள் வெற்றி அளிக்கப்பட வேண்டும். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

தமிழர்களின் பிரச்சினையை வர இருக்கின்ற அரசாங்கம் உணர்ந்து கொண்டு நாட்டு நிலைமை ஓரளவேணும் முன்னேற்ற கரமாக கொண்டு செல்லும் போது தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அணுகுவது,காத்திரமான தீர்வுகளை முன் வைப்பது மற்றும் குரல் கொடுப்பது என்பது சாத்தியமானதாக அமையும். அதனை விடுத்து இப்போது நாங்கள் நெருக்கடிக்கு அப்பால் ஆதரவு வழங்கத் தேவையில்லை.

அது எமக்கு தேவையற்ற விடயம் என்ற எண்ணப்பாடு ஒட்டுமொத்த இலங்கையை மாத்திரமல்ல தமிழர்களையும் ஒட்டு மொத்தமாக அழிவு பாதையில் இட்டுச் செல்லும் என்பது உண்மை.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (08-07-2022)**



# கனடா இந்து

CANADA HINDU

Published by Thevikumaran, Sri Durka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL.: 416-759-9597


# துர்க்கேஸ்வரத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டது



7-7-2022 வியாழன் கொடியேற்ற காட்சிகள்



**துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா**

**30-7-2022 சனி**

07-07-2022 வியாழன்
கொடியேற்றம்

## இனி வரும் திருவிழாக்கள்

கைலாசவாகனம்
12-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

சப்பரத் திருவிழா
16-07-2022 சனி
இரவு 8.00 மணி

மாம்பழத்திருவிழா
24-07-2022 ஞாயிறு
இரவு 8.00 மணி

[illegible]
[illegible]
26-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

[illegible]
27-07-2022 புதன்
இரவு 8.00 மணி

வேட்டைத் திருவிழா
28-07-2022 வியாழன்
இரவு 8.00 மணி

சப்பறம்
29-07-2022 வெள்ளி
இரவு 8.00 மணி

தேர்த்திருவிழா
30-07-2022 சனி
காலை 9.00 மணி

தீர்த்தம்
[illegible]
31-07-2022 ஞாயிறு
காலை 9.00 மணி

பூங்காவனம்
1-08-2022 திங்கள்
மாலை 6.30 மணி

வைரவர் மடை
2-08-2022 செவ்வாய்
மாலை 6.30 மணி



# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

**வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4**



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com

ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH)
TEL: 416 535-6560

அம்மன்
## பிரம்மோற்சவ பெருவிழா 2022

அம்மன் திருவிழா
(22.07.2022 வெள்ளி முதல் 10.08.2022 புதன் வரை)



திருவிழா நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 22.07.2022 | வெள்ளி நண்பகல் 11மணிக்கு கொடியேற்றம் |
| 29.07.2022 | சதுர் சஷ்டி உபசாரபூஜை - வெள்ளி மாலை 7:00 மணிக்கு (64 உபசாரம்) |
| 31.07.2022 | மாம்பழத் திருவிழா - ஞாயிறு காலை 10 மணிக்கு<br>ஆடிப்பூரத் திருவிழா ருதுசாந்தி - மாலை 7:00 மணிக்கு |
| 02.08.2022 | மஞ்சத் திருவிழா - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 04.08.2022 | வேட்டை திருவிழா - வியாழன் மாலை 6 மணிக்கு |
| 05.08.2022 | சப்பரத் திருவிழா - வெள்ளி மாலை 8 மணிக்கு<br>வரலக்சுமி விரதபூஜை - மாலை 6 மணிக்கு |
| 06.08.2022 | தேர்த்திருவிழா - சனி காலை 11:00 மணிக்கு |
| 07.08.2022 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு<br>கொடியிறக்கம் - மாலை 8 மணிக்கு |
| 08.08.2022 | பிராயச்சித்தம் அபிஷேகம் - காலை 9 மணிக்கு<br>திருக்கல்யாண உற்சவம் - மாலை 8 மணிக்கு |
| 09.08.2022 | பூங்காவனம் - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 10.08.2022 | வயிரவர் மடை புதன் மாலை 7 மணிக்கு |




## அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக

# Gotabaya Rajapaksa Running for Cover and Becoming Stateless

- Siva Parameswaran, Senior International Journalist London



He is gone! Disgraced and out.

A man who made thousands stateless and uprooted them forcibly from their homeland is now literally stateless.

During the final phase of the brutal civil war Nanadasena Gotabaya Rajapaksa was a much feared and dreaded man who is accused of 'war crimes and being responsible for the disappearance of thousands of minority Tamils'. Now, after renouncing his US citizenship, he is finding it hard to secure a place for him to stay.

After a brief stay in Maldives, where locals and diaspora Sri Lankans protested his visit and stay, the man who was defence secretary and subsequently president arrived in Singapore on a 'private visit'.

The government of Singapore has made it clear "He has not sought, nor has he been offered any asylum," the statement reiterated "Singapore does not generally offer asylums."

It further added: "Police ask that the public, Singaporeans, residents, work pass holders and social visitors alike, abide by our local laws. Action will be taken against anyone participating in a public assembly that is illegal."

Known for his draconian style of working during the war and post war period whom the minority Tamil feared and dreaded very much, was said to be so scared to travel by a passenger flight from Colombo to Male and then to Singapore. He was transported to Male by a Sri Lankan Air force plane and then a 'chartered' Saudi airlines plane which touched down at the Changi airport in Singapore.

Probably this was the not the end he was expecting. The writing on the wall was very clear since the beginning of the year as the country plunged into an economic crisis with reserve foreign exchange draining fast, he was accused of 'sitting in an ivory tower' under the impression that people could be easily hoodwinked as during the war and things will become alright by itself. The Rajapaksa brothers were so confident that 'as long as China was with them' there was nothing to fear. Alas! That was not the case to be.

Dollars draining faster than expected he took many unwise decisions to ban imports, which included the all-important fertiliser crucial to the struggling agriculture in the country. A country sans any major industries or a financial hub like many island nations, nor a service economy the writing on the wall was very clear.

Prices skyrocketed punching big holes in the pocket of even the above average Sri Lankans and the US dollar vs Sri Lankan rupee exchange was going up day by day even touching LKR 400 to a dollar. Trouble was brewing for the Rajapaksa regime ever since the ruthless Gotabaya came to power, who claimed publicly he was elected by the majority Sinhalese, and he was 'their president'.



And that alienated him from the minority Tamil and Muslims. His Presidency was also marred by the way he handled the Covid crisis. Lacking a will to listening to professional advice he resorted to 'local unscientific advice' and was adamant in cremating those Muslim dead rather than burying them as per the Islamic tradition. As protests increased locally, his regime went to the extent of requesting Maldives for support seeking to 'export the bodies' for burial there.

Never in my career so far, I have ever come across a concept of exporting dead bodies to another country for burial. The Rajapaksa's were ill advised by hard-line Sinhala lobby that by burying Covid dead Muslims, the underwater table would be contaminated. However, international condemnation and the pressure of the local scientific community prevailed and the idea was stopped. Now, it is the same Maldives to which he fled on his first leg before flying off to Singapore from there.

Caught in the crossfire is the former president of Maldives and the current speaker of Maldives Mohamed Nasheed who is accused of facilitating his flee via Male. It's a known fact that Nasheed is a friend of the Rajapaksa's, and he was co-opted to facilitate international support for Sri Lanka which is facing an enormous economic and existential crisis.

Gotabaya Rajapaksa had failed on all fronts. The economy plummeted during his regime, communal harmony hit a rock bottom, international relations severely damaged due to his hobnobbing with the Chinese like his older brother and former President and Prime Minister Mahinda Rajapaksa who has appears to be presiding over the decline of the Rajapaksa regime.

Extravagant spending under the guise of development, over dependence on Chinese and handing over civilian administration to 'war accused and war mongering' top brass like Gen Kamal Gunaratna, Admiral Sarath Weerasekara led to the downfall of the Rajapaksa regime and clan. It was an overtly militarised administration throughout the country, right from defence to upkeep of local sanitation facilities and farming.




Large swathes of lands belonging to the Tamil people that was forcefully taken by the military during the war is yet to be returned to the rightful owners and the Gotabaya Rajapaksa regime showed scant respect of the sufferings of those who lost their land and lives of their near and dear. Even after 13 years since the civil war came to an end not even a single person either handed over or surrendered to the security forces have been seen again.




Serving officers of the Sri Lankan Administrative Services were side lined and plum civilian posts like Heads of department like Defence, Internal Security, Public distribution, Civil supplies, urban development, and others were handed over as doles to his erstwhile colleagues in the armed forces. The culture of impunity gained root under Gotabaya and despite strong evidence against those military officers in power it was simply brushed aside. General (retd) Kamal Gunaratna and Admiral (retd) Sarath Weerasekara acted like extra constitutional authorities like the war days and even the national task force for Covid management was led by another Rajapaksa crony Gen. Shavendra Silva rather than an experienced doctor in public health and policy.

Coupled with mismanagement and lack of long-term vision for the overall development of the nation the now ousted embattled President turned to the Buddhist prelates for anything and everything in the country holding regular durbars with them and apprising them of national issues and action plan to solve them seeking their inputs and guidance. By appointing a rabid monk Gnanasara Thero as head of the 'one nation one law' task force, Gotabaya Rajapaksa made a mockery of democracy and communal harmony.

As the future of the nation is uncertain, either Karma or Newtons third law has decisively played a part in the life and times of Gotabaya Rajapaksa.

It's reliably learnt that Singapore is not his final destination, and he is there for a medical check-up. And as fate had its last laugh the ousted president remains stateless as of now having given up his priceless US citizenship.



Now one wicket down, the political game in Sri Lanka is now poised for interesting times ahead.

# கோத்தா பதவி விலகாவிட்டால் போராட்டம் தொடரும்! பிக்குகள் எச்சரிக்கை





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்த கூற்றுப்படி போயா தினமான புதன்கிழமை (13) அன்று தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என தேசிய பிக்குகள் முன்னணியினர் அலரி மாளிகை முன்பாக சத்தியாக்கிரகத்தினை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்த கூற்றுப்படி புதன்கிழமை அவர் தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். அதேபோன்று ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தியே இந்த சத்தியாக்கிரக போராட்டத்தை அந்த புத்த பிக்குகள் ஆரம்பித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "டீல் போட்டு" பதவியில் இருக்க அனுமதிக்க மாட்டோம் எனவும் தேசிய பிக்குகள் முன்னணியினர் தெரிவிக்கின்றனர் கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பதவி விலக கோரி செவ்வாய்க்கிழமை கண்டி தலதா மாளிகை முன்னால் பிக்குமார் சத்தியாகிரக போராடாடத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதி இல்லம், அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகமான அலரி மாளிகை என்பன போராட்டக்காரர்களின் வசமானது. இதனைத் தொடர்ந்து தலைமறைவான ஜனாதிபதி தான் பதவி விலகுவதாக அறிவித்த அதேநேரம் அதற்கு செவ்வாய்க்கிழமை காலக்கெடு முன் வைத்தார்.

இவ்வாறு காலக்கெடு முன்வைத்த ஜனாதிபதி நாட்டில் இருந்து தப்பிச் செல்ல எடுத்த முயற்சிகள் பலன் அளிக்காதுவிட்டால் பதவி விலகும் முடிவை தள்ளி வைக்ககூடும் என தற்போது எதிர்வு கூறப்படும் நிலைமயிலேயே பிக்குகள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதேநேரம் புதன்கிழமை அன்று ஜனாதிபதி பதவி விலக மறுத்தால் மறுநாள் (14) முதல் போராட்டங்கள் மேலும் உச்சம் பெறலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.



# அரசாங்கம் இல்லாத நாடு?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் மஹிந்த ராஜபக்ச எந்த விமான நிலையத்தில் வந்து இறங்கி வெற்றி பெருமிதத்தோடு மண்ணைத் தொட்டு கும்பிட்டு கைகளை அசைத்தாரோ, அதே விமான நிலையத்தில் ஓர் அகால வேளையில் அரச மரியாதைகள் எதுவும் இன்றி ரகசியமாகத் தப்பிச்செல்லும் ஒரு குற்றவாளியை போல அவருடைய தம்பியார் கோட்டாபய ராஜபக்சே தப்பி சென்றிருக்கிறார்.

இலங்கைதீவின் வரலாற்றில் முரணான காட்சிகள் யாவும் அரங்கேறும் காலகட்டம் இது. மத நம்பிக்கை உள்ள தமிழ் மக்கள் அல்லது பிரயோகிக்கவியலாத கோபத்தோடு தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் இது கர்மா என்று கூறுவார்கள். கடந்த சில மாதங்களாக நாட்டில் நடப்பவற்றை அவர்கள் பாவ புண்ணிய கணக்குக் கூடாக விளங்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

இப்பொழுது கோட்டா நாட்டைவிட்டு ஓடிவிட்டார். இக்கட்டுரை எழுதப்படும் நாளில் அவர் தன் பதவியை ராஜினாமா செய்வார் என்று முன்பு அறிவித்திருந்தார்.ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. மாறாக தான் இப்பொழுது வெளிநாட்டில் இருக்கும் காரணத்தால் ரணில் விக்ரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்திருப்பதாக சபாநாயகர் கூடாக அறிவித்திருக்கிறார். அவர் உத்தியோகபூர்வமாக வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து தப்பிச் சென்றார். அதுவும் நள்ளிரவில். எனினும் அவர் உத்தியோகபூர்வமாக வெளிநாட்டில் இருப்பதாகக் காட்டிக்கொண்டு பிரதமரை பதில் ஜனாதிபதியாக நியமித்து இருக்கிறார்.

பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் நிச்சயமாக ராஜபக்சக்களை பாதுகாப்பார் என்பது உலகறிந்த விடயம். 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின்போது அவர் அதை கச்சிதமாக செய்தார். தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த சுமூகமாக ஆட்சியை கைமாற்ற மாட்டார் என்ற ஒரு எதிர்பார்ப்பு அப்பொழுது காணப்பட்டது. எனினும் ரணில் மஹிந்தவை அவருடைய இடத்துக்கு சென்று சந்தித்தார். அச்சந்திப்பின் பின் ஆட்சி சுமுகமாக கைமாறியது. அதன்பின் நடந்த நல்லாட்சி என்று அழைக்கப்படும் ஆட்சி காலத்தில் ராஜபக்சக்கள் பெரும்பாலும் தண்டிக்கப்படவில்லை. இளைய ராஜபக்சவாகிய நாமல் சிறிது காலம் சிறை சென்றார். மூத்த ராஜபக்சக்கள் யாரும் பிடிபடவில்லை. அதாவது ரணில் ராஜபக்சக்களை பாதுகாத்தார். உள்நாட்டிலும் பாதுகாத்தார் வெளிநாடுகளிலும் பாதுகாத்தார்.

மொத்தத்தில் ரணில் விக்ரமசிங்க ராஜபக்சக்களைப் பாதுகாப்பார். இப்பொழுதும் அவர் அதைத்தான் செய்கிறார். நாட்டை விட்டுத் தப்பியோட எத்தனித்த ஜனாதிபதியை விமான நிலைய அதிகாரிகள் முதலில் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அவரை வரவேற்கத் தயாராக இருக்கவில்லை. எனவே அவர் மாலைதீவுகளுக்குத் தப்பிச் சென்றார். அவ்வாறு நள்ளிரவில் அவர் தப்பிச் செல்வதற்குரிய ஏற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்கவே செய்து கொடுத்ததாக பரவலாக நம்பப்படுகிறது. இவ்வாறு ராஜபக்சக்களை பாதுகாப்பதன்மூலம் ரணில் தனது நீண்ட கால கனவையும் பாதுகாக்கலாம். ஜனாதிபதியாக வரலாம் என்று அவர் ஆசைப்படுகிறார். அதை ராஜபக்சர்களின் தாமரை மொட்டு கட்சி அனேகமாக ஆதரிக்கும். ஆனால் ஏனைய எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவ்வாறு ரணிலையும் அகற்றினால் நாட்டின் நிலை என்ன?

ஏற்கனவே நாட்டில் அரசாங்கம் இல்லை என்ற ஒரு நிலை காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளைச் கையாள்வதற்கு ஏதாவது ஒரு கட்டமைப்பு தேவை. அவ்வாறான கட்டமைப்பு இல்லையென்றால் நெருக்கடிகள் மேலும் தீவிரமடையும். அது ஏழைகளைக் கடுமையாகப் பாதிக்கும். ரணில் ஏற்கனவே பன்னாட்டு நாணய நிதியத்துடன் உரையாடல்களை தொடங்கியவர். பன்னாட்டு நாணய நிதியம், மேற்கு நாடுகள் போன்றவற்றின் விருப்பத்தெரிவு. அவர் இல்லாத இடத்தில் வேறு யாரை மேற்கு நாடுகள் ஏற்றுக் கொள்ளும் என்ற கேள்வியும் உண்டு. அவருக்கு பதிலாக யாரை கொண்டு வந்தாலும் அந்த தலைவர் மேற்கு நாடுகளின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும். அதற்கு கொஞ்சம் காலம் எடுக்கும். ஆனால் அதற்கிடையில் நாடு மேலும் நெருக்கடிக்குள் மூழ்கி விடும். எனவே எதிர்க்கட்சிகள் ரணிலை விட பிரகாசமான ஒரு தெரிவை முன்வைக்குமா என்ற கேள்வி உண்டு.

அதேசமயம் மக்கள் எழுச்சிகளை ஆதரிப்பவர்கள் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். கடந்த ஒன்பதாம் தேதி வரையிலும் போராட்டத்தின் கனிகளை ரணில் தன்னுடைய சட்டப்பைக்குள் போட்டுக் கொண்டார். அவர் பிரதமராக வந்திராவிட்டால் கோட்டா மே ஒன்பதுக்கு முன்னரே அகற்றப்பட்டிருப்பார். அதாவது போராட்டத்தின் இறுதி வெற்றியை ரணில் தாமதப்படுத்தினார். இனிமேலும் ரணிலிடம் அதிகாரத்தை கொடுத்தால் அவர் போராட்டத்தின் இறுதி வெற்றியை ஒத்திவைப்பது மட்டுமல்ல, போராட்டத்தையே நீர்த்துப்போகச் செய்து விடுவார். எனவே போராட்டம் அதன் வழியில் போகட்டும். ரணில் என்ற வேகத்தடுப்பைப் பயன்படுத்தி போராட்டத்தைத் திசை திருப்பவோ அல்லது பின்னடைய செய்யவோ ராஜபக்சக்களும் தாமரைமொட்டுக் கட்சியும் முயற்சிப்பதை தடுக்க வேண்டும்.

ரணில் இல்லையென்றால் நாடாளுமன்றம் ஏதோ ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு போக வேண்டியிருக்கும். அந்த இடைக்கால ஏற்பாடு தோல்வி அடைந்தால் நாடாளுமன்றம் தோல்வி அடைந்ததாக கருதப்படும். ஏற்கனவே நாடாளுமன்றம் தோல்வி அடைந்து விட்டது என்பதே உண்மை. இந்நிலையில் முதலில் கோத்தாவை போக சொல்லி போராடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் மகிந்தவை போக சொல்லி கேட்டார்கள். அதன் பின்னர் மே மாதம் நாடாளுமன்றத்தில் உள்ள திருடர்களைப் போக சொல்லி கேட்டார்கள். அந்தப் போராட்ட கிராமத்தை அவர்கள் நாடாளுமன்றத்தின் வாசலில் அமைத்தார்கள். அந்த கிராமத்துக்கு "ஹொரு கோகம" என்று பெயர் வைத்தார்கள் "ஹொரு" என்பது சிங்கள பேச்சுவழக்கில் திருடர்கள் என்று பொருள். எனவே நாடாளுமன்றம் ஒரு பொருத்தமான தீர்வைக் கண்டடையத் தவறினால், திருடர்களை அகற்றும் போராட்டத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னெடுக்க வேண்டிஇருக்கும் என்று போராட்டத்தை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். இக்கட்டுரை எழுதப்படுகையில் போராட்டம் நாடாளுமன்றத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டது.

நாடாளுமன்றத்தை நிராகரிப்பது அல்லது நாடாளுமன்றத்துக்கு எதிராகப் போராடுவது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவைப் பொறுத்தவரை, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்த ஒரு நிலைதான். பிரதிநிதித்துவ ஜனநாயகம் வேண்டாம் என்றால் அதற்கு மாற்று என்ன? குமார் குணரட்ணம் கூறுவதுபோல மக்கள் அதிகார சபைகளால் நாட்டை உடனடியாக நிர்வகிப்பதற்குரிய கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுமா?

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக போராட்டக்காரர்கள் மீது வைக்கப்படும் முக்கியமான விமர்சனம் என்னவென்றால் அங்கே ஒரு மையக் கட்டமைப்பு,ஒரு தலைமை, ஒரு சித்தாந்த அடித்தளம் இல்லை என்பதுதான். அது ஒரு கலவையான கட்டமைப்பு. அங்கே தீவிர இடதுசாரிகளும் உண்டு தீவிர வலதுசாரிகளும் உண்டு. லிபரல்களும் உண்டு. ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள் புத்திஜீவிகள் உண்டு. தனிப்பட்ட தன்னார்வலர்களும் உண்டு. இவர்கள் அனைவரும் ஒரே கொள்கை உடையவர்கள் அல்ல. கோட்டாவை அகற்றுவது என்ற ஒரு மையத்தில் இணைகிறார்கள் மற்றபடி இவர்களை ஒரு பொதுச் சித்தாந்தத்தின் அடிப்படையில், ஒரு தலைமையின் கீழ், அல்லது இணைத் தலைமைகளின் கீழ் கொண்டு வருவது கடினம். இதுதான் மக்கள் போராட்டங்களில் காணப்படும் மிகப்பெரிய பலவ-ீனம்.தலைமைத்துவ வெற்றிடம்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை தோற்கடித்த பின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு போராட்டக்காரர்கள் தயாரா? பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு மாற்றாக வேறு ஏதாவது ஒரு கட்டமைப்பு, இறுதி இலக்கு அவர்களிடம் உண்டா? முன்னிலை சோசியலிசக் கட்சியோ அல்லது ஜேவிபியோ தேர்தல்மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாதவை. அதனால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை அவர்கள் விமர்சிக்கலாம். ஆனால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மாற்றாக ஒரு கட்டமைப்பை அவர்கள் கட்டியெழுப்ப வேண்டும். இல்லையென்றால் நாட்டில் அரசாங்கம் அற்ற நிலை தொடரும். அது ஏறக்குறைய அராஜகம்தான். அப்படிப்பட்ட ஒரு அராஜக வெளி ராணுவ ஆட்சிக்கும் வாய்ப்புகளை உருவாக்கும். நாட்டில் இப்பொழுது நிலைகுலையாமல் மேலிருந்து கீழ்நோக்கிய பலமான தலைமைத்துவத்தின் கீழ் ஒரு நிறுவனமாக காணப்படுவது படைத்தரப்புத்தான்.

எனவே இந்த இடத்தில் போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்புக்கள் தீர்க்கமாக யோசித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஒன்றில் அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அல்லது இப்போதைக்கு நெருக்கடிகளை கெட்டித்தனமாக கையாளக்கூடிய ஒரு கட்டமைப்பு என்று கூறத்தக்க எதையாவது உருவாக்கி மக்களுடைய நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்.

தான் ஜனாதிபதியாக வருவதை ஆர்ப்பாட்டக்காரர்கள் விரும்பவில்லை என்பது ரணிலுக்கு தெரியும். அதனால்தான் அவர் தனது அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தவர்களை கலைப்பதற்கு முயற்சிக்கிறார். ஊரடங்குச் சட்டம் அவசரகாலச் சட்டம் போன்றன அந்த நோக்கத்தை கொண்டவைதான். ஆனால் சட்டம், ஒழுங்கு, யாப்பு, நாடாளுமன்றம் எல்லாவற்றையும் மீறித்தான் மக்கள் ராஜபக்ச குடும்பத்தை அகற்றினார்கள். எனவே இனி மேலும் அவ்வாறு ரணிலை அகற்றுவதும் நாடாளுமன்றத்தை முடக்குவதும் சாத்தியம். ஆனால் அதுவல்ல பிரச்சினை. அப்படி அகற்றிய பின்வரும் தலைமைத்துவ வெற்றிடத்தில் யாரை நிறுவுவது? என்பதுதான்.

### வீணாவின் கவிக்கணை

நிலையில்லா வாழ்க்கை,
அதில் ஆசைகளோ ஏராளம்,
கனவுகளோ தாராளம்,
நினைத்ததை நிகழ்த்திட,
நடப்பதை ஏற்றுக்கொள்ள,
விடா முயற்சியும்,
திடம்கொண்ட மனமும்
திணறாத புத்தியும் இருந்தால்,
வளம்கொண்டு வாழ்க்கை
உன் மனம்போல மாறுவது
உறுதியாகும்.

# காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டக்காரர்கள் 13 கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்



இலங்கையில் ஆட்சி மாற்றத்தை கோரியும், நாட்டில் அடுத்து என்ன செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக கொழும்பு காலிமுகத்திடலில் போராடி வரும் போராட்டக்காரர்கள் 13 அம்ச கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது உடனடியாக நடைமுறைபடுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் அனைத்து கட்சியினரையும் வலியுறுத்துகின்றனர்.

அவர்கள் முன்வைத்துள்ள அந்த 13 கோரிக்கைகள்:

1. ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதுடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க உட்பட அமைச்சரவை, பதவி விலக வேண்டும்.

2. கோட்டா - ரணில் அரசாங்கம் பதவி விலகியவுடன், மக்களின் போராட்டத்துடன், பொருளாதாரம், சமூக, அரசியல் நோக்கங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, இடைக்கால அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

3. இடைக்கால அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் வகையில், மக்கள் கவுன்சில் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

4. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், குறுகிய மற்றும் நீண்ட கால திட்டத்தை செயற்படுத்த வேண்டும். எரிபொருள், எரிவாயு மற்றும் கல்வி, பொது போக்குவரத்து சேவை வினைத்திறனாக்கல், நுண் கடன் மற்றும் விவசாய கடன்களை ரத்து செய்யப்படுவதுடன், லீசிங், சிறு வியாபார கடன்களை ரத்து செய்தல் அல்லது மீள் செலுத்தலுக்கான கால அவகாசம் வழங்கல்.

5. தற்போது கைது செய்யப்பட்டுள்ள போராட்டக்காரர்கள் உட்பட, சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

6. கொலை, காணாமல் ஆக்கபட்ட விடயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க, விசேட பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும்.

7. கடந்த இரண்டு தசாப்தங்களாக, ராஜபக்சக்களால் மோசடி செய்யப்பட்ட அரச நிதி, முறையான விசாரணைகளுடன் அரசு உடமையாக்கப்படுவதுடன், மோசடியாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் முறைகேடான முறையில் சேகரித்துள்ள சொத்துக்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

8. தற்போதைய வரி முறைமை மாற்றி அமைக்கப்பட்டு, நேர் வரியை அதிகரித்து, மறைமுக வரியை குறைக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு சாதகமான முறையில், வரி கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

9. கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகியதை தொடர்ந்து, மக்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, முழுமையாக ரத்துச் செய்யப்பட வேண்டும்.

10. மக்கள் வாக்கெடுப்புடன், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். உயிர் வாழும் உரிமை அடிப்படை உரிமையாகவும், நிறைவேற்று அதிகாரம் ரத்துச் செய்தல், நீதியான தேர்தல் இடம்பெறும் முறையான பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

11. மக்களுக்கு பொறுப்புக் கூறாத அரசியல்வாதிகளை மீளழைக்கும் உரிமை உறுதிப்படுத்தும் பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். சட்டவாக்கத்தில், மக்கள், மக்கள் பிரதிநிதிகளை தவிர்த்து பங்குபற்றும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

12. இனவாதம், தேசிய ரீதியான அழுத்தங்களை முழுமையாக இல்லாதொழித்து, சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும், சகல இனங்களினதும், மதம், மொழி, பால் மற்றும் ஏனைய கலாசார தனித்துவ அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்புடைய வகையில், அடிப்படை சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும்.

13. இடைக்கால அரசாங்கத்தின் அடிப்படை நோக்கங்களாக, மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், ஸ்தாபிக்கப்படும், இடைக்கால அரசாங்கம், 12 மாத காலப்பகுதியில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதுடன்





# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் புதிய தலைவராக பிரபல எழுத்தாளரும் பேச்சாளரும் கவிஞருமான அகணி சுரேஸ் அவர்கள் பதவியேற்றார்

கனடிய செய்திகள் Canadian News



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் புதிய தலைவராக பிரபல எழுத்தாளரும் பேச்சாளரும் கவிஞரும் "திருக்குறளை" திருமந்திரமாக ஏற்று உலக-ளவில் பங்காற்றி வருப-வருமான அகணி சுரேஸ் அவர்கள் பதவியேற்றார். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கான 2022-2024 காலப்பகுதிக்கான புதிய நிர்வாக சபை 09-07-2022 மதியம் ஸ்காபுறோவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பதவியேற்றது. அனைத்துப் பதவிகளுக்கும் அனைவரும் போட்டியின்றி ஏகமன-தாகத் தெரிவானார்கள்.

இணையத்தின் முன்னாள் தலைவர் எழுத்தாளர் குரு அரவிந்தன் இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் "2018-2022 வரை செயற்பட்ட எமது நிர்வாக சபையினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவிதத்திலும் ஒன்றுபட்டு இதுவரை காலமும் சிறப்பாகச் செயற்பட்ட நிர்வாகசபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரிதாகுக. அத்துடன் புதிய தலைவருக்கும் எமது வாழ்த்துக்கள்." என்றுதெரிவித்துள்ளார்.

பின்வருவோர் நிர்வாக சபையில் (யூலை 2022- யூன் 2024) ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அன்புடன்,
குரு அரவிந்தன்

CTWA – Committee for July 2022 – June 2024
பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள். 9-7- 2022 (AGM)
President தலைவர் - S. Akani Suresh
Vice President உப-தலைவர் - Kuru Aravinthan
Secretary செயலாளர் - Kamalavathana Suntha
As. Secretary உதவிச் செயலாளர் - R.N. Logendralingam
Treasurer தனாதிகாரி - T. Gnanaganeshan
Committee Members நிர்வாக சபை உறுப்பினர்கள் -

1) S.J.Sothy
2) K. Ravinthranathan
3) G. Rajgumar
4) Aruna Arulappu
5) Vasuki Nagularajah
6) Kanapathy Ravinthiran



# பிரம்ரன் மாநகரில் "ரிவர்ஸ்ரோன்" சன சமூக மையம் தற்போது பொது மக்களுக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது

BRAMPTON Media Release

உடனடி வெளியீட்டுக்காக

## ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடம் இப்போது ப்ராம்ப்ட்டனில் திறக்கப்பட்டுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (July 7, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரின் புத்தம்புதிய சமுதாய மையமாகிய, ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடம், இப்போது பொதுமக்களுக்காகத் திறந்துவிடுப்பட்டுள்ளது.

ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது 34,000 சதுர அடிகொண்டபடி புனரமைக்கப்பட்டுள்ளது; இதில் புதுப்பிக்கப்பட்ட உப்புநீர் குளம், விரிவுபடுத்தப்பட்ட உடை மாற்றும் அறைகள், உடற்பயிற்சிக்கான அறைகள் மற்றும் பலநோக்கு அறைகள் பலவும் அமைந்துள்ளன.இந்தப் புதிய சமுதாயக் கூடத்தில் உடற்பயிற்சி சாலை மற்றும் ஸ்க்வாஷ் விளையாட்டு மைதானங்கள் மற்றும் பலவும் உள்ளன.

ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது, ப்ராம்ப்ட்டன் நகரில், 195 டான் மினாகர் ட்ரைவில் அமைந்துள்ளது. என்னென்ன வசதிகள் உள்ளன எனப் பார்ப்பதற்கும், நிகழ்ச்சிகளுக்கு பதிவு செய்துகொள்வதற்காகவும் வருகை தருக: www.brampton.ca/riverstone .

**அறிஞர் கூற்றுக்கள்**

"எங்கள் ப்ராம்ப்ட்டன் நகரத்தின் புதிய பொழுதுபோக்கு மையமான ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடத்தினைத் திறப்பதில் நாங்கள் பரவசமடைகிறோம். ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக்கான உபகரணம் பொருத்துதல், உப்பு நீர் குளத்தை அணுகும் வகையிலான சாய்தளம், உடற்பயிற்சி உபகரணங்களை மாற்றுதல் மற்றும் பல விஷயங்களில் புதுப்பித்தல்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகளை உபயோகிக்க அனைவரையும் ஊக்குவிக்கிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம் மற்றும் எங்கள் சமூகத்தில் உள்ள அனைவருமே அணுகும் வகையிலான பொழுதுபோக்கு வாய்ப்புகளை வழங்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். ரிவர்ஸ்டோன் சமுதாயக் கூடமானது, ப்ராம்ப்ட்டனுக்கு சேவை செய்கின்ற வகையில் கூடுதலான சிறந்த ஒரு அம்சமாகும்."

- *ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 TTY: 905.874.2130

---

அன்புடையீர்,

**கனடா வாழ் துன்னாலை – கரவை மக்கள் மன்றம் நடாத்தும் 25 வது ஆண்டு கோடை கால ஒன்று கூடல் 2022**

இடம்: **Milliken Park Area C**
**(Middlefield & & Steeles)**
**5555 Steeles Ave. E, Scarborough, Ontario M9L 1S7**

காலம்: **July 16, 2022 சனிக்கிழமை**

நேரம்: காலை 9:00 – மாலை 8:30 வரை நடைபெற உள்ளது.

தயவு செய்து இந்த அறிவித்தலை உங்கள் ஊடகத்தில் பிரசுரிக்குமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477
மு.கருணைநாதன் 647-703-4674

அன்புடன்

மு.கருணைநாதன்
தலைவர்

# காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

**FREE CLASSES**

To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE • GROUP BENEFITS • RRSP • RESP • DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



**Sritharan Thurairajah**

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771

Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

LaCapitale · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · BMO Insurance

Are you getting Million Dollar advice?


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004







## நல்லூர்க்கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

01.08.2022 திங்கள் முதல் 28.08.2022 ஞாயிறுக்கிழமை வரை

குகனேய அடியார்களே !

நிகழும் மங்களகரமான சுபகிருது வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்த ருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 01.08.22 | திங்கள் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 02.08.22 | செவ்வா | 01 | கொடியேற்றம் |
| 05.08.22 | வெள்ளி | 04 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 09.08.22 | செவ்வா | 08 | பிரதோசம் |
| 11.08.22 | வியாழ | 10 | மஞ்சம். |
| 14.08.22 | ஞாயிறு | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 17.08.22 | புதன் | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 19.08.22 | வெள்ளி | 18 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா<br>கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 20.08.22 | சனி | 19 | சூரியோற்சவம் |
| 21.08.22 | ஞாயிறு | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 22.08.22 | திங்கள் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 23.08.22 | செவ்வா | 22 | மாம்பழத்திருவிழா, |
| 24.08.22 | புதன் | 23 | சப்பறம், பிரதோசம் |
| 25.08.22 | வியாழ | 24 | தேர்த்திருவிழா |
| 26.08.22 | வெள்ளி | 25 | தீர்த்த உற்சவம் |
| 27.08.22 | சனி | 26 | திருக்கல்லியாணம் |
| 28.08.22 | ஞாயிறு | 27 | வைரவர் உற்சவம் |

**அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.** தொலைபேசி இலக்கம் -416 2939004

### காலை DAY TIME

காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

### மாலை NIGHT TIME

மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:15 மணி கும்ப பூஜை Kumba pooja 6:15 pm
மாலை 7:00 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:00 Pm
இரவு 7:30 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 7:50 pm

பகல்.இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர் ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர் கற்பூரச்சட்டி,காவடிபோன்ற நேர்த்திக்கடன் செய்யவுள்ளோர் தேர்த்திருவிழாஅன்றுஆறு முப்பெருமானுக்கு108பால் குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

### 25.08.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழா

காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:00 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

# Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is finally available at the Beer Store






Sinha Stout, the indisputable king of dark beers, presents its big brother – Sinha Lager – to Canadian beer connoisseurs. With a rich heritage of close to 150 years, the Sinha range prides itself amongst Asia's greatest beers, winning global acclaim across every continent.
Sinha Lager is renowned to be a great thirst quencher with an alcohol strength of 4.8%. It stems from an age-old recipe using the finest ingredients promising great flavour and refreshment. Six-packs will be available at 89 stores across Brampton, Bolton, Georgetown, Mississauga, Oshawa, Ajax, Whitby, Toronto, Etobicoke, and North York, retailing at just $17.45 for a six pack of 330ml bottles.
The award-winning Sinha Lager hails from sunny Sri Lanka and boasts a history stretching back to 1881 when British Explorer, Sir Samuel Baker, set up Ceylon Brewery to cater to European tea farmers living in the mountains of Sri Lanka 6000 feet above sea level.

The brews produced at the Lion Brewery in Sri Lanka are some of the best kept secrets from the rest of the world, until their discovery in the 90s when the brewery started exporting beyond its shores and have since won global acclaim including several gold medals at the prestigious Monde Selection beer awards.
During the promotional period to mark its foray into Canada, Sinha Lager, will participate at the Toronto Festival of Beer, and this will be the first time a Sri Lankan beer will be showcased at the annual Beer Fest. The event will take place from 22nd to 24th of July and offers a great opportunity for Canada's beer aficionados to flavour this acclaimed beer all the way from salubrious Sri Lanka.
Upon its discovery by global beer connoisseurs, Sinha Lager, is tantalizing drinkers around the world, and is now available at the Beer Store in Canada. True to Sri Lanka's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence.

"For many years, our discerning customers in Canada have flavoured the jewel in our crown, Sinha Stout – the 'best Stout in the world', as endorsed by the legendary late beer hunter, Michael Jackson. Now we offer our other hidden gem, Sinha Lager, and we have no doubt consumers will fall in love with this legendary beer . This golden lager with a crisp refreshing finish, was born in the mountains of Sri Lanka 6000 feet above sea level. This award-winning exotic 4.8% lager offer hints of fruit, caramel, and subtle hop notes. Brewed since 1881, with water, malted barley, rice, hops and caramel, Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is a perfect thirst quencher on a hot sunny day. Sinha Lager pairs well with Asian, African, Middle Eastern, and Western cuisine said Stefan Atton, Vice President of the international business for Lion Brewery Ceylon PLC.

# கோட்டாபய இராசபக்சாவை இன்று ஊழ்வினை தேடி வந்து பிறந்த நாட்டை விட்டே துரத்தி விட்டது! கனடா நக்கீரன்




ஆகாயத்திற்குச் சென்றாலும், நடுக் கடலுக்குச் சென்றாலும், மலையின் இடுக்கில் மறைந்துகொண்டாலும், எங்கு சென்று ஒளிந்துகொண்டாலும்,
தீய செயலைச் செய்தவர், அதன் விளைவுக்குத் தப்பவே முடியாது. இந்தப் பொன்மொழி புத்தர் உடையது.

புத்தர் காலத்துக்குப் பின்னரும் ஒருவன் காலை செய்யும் தீவினை அவனை மாலை வந்து சூழும் என்ற வாழ்வியல் உண்மையை தமிழ்ப் புலவர்கள் தமிழ் அறநெறியாளர்கள் வற்புறுத்தி வந்துள்ளார்கள். அறக் கோட்பாட்டை வற்புறுத்தும் இலக்கியங்களை பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் தொகுத்துள்ளார்கள். இவை சங்கம் மருவிய காலப் பகுதியில் இயற்றப்பட்டவை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். இவை தமிழர்களது அக்காலப் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக் கூறுகின்றன.

சங்க கால இலக்கியங்கள் தமிழர்களின் வீரம், வெற்றி, ஈகை, கொடை போன்ற பண்புகளைப் போற்றுகின்றன. சங்க காலத்தில் பரத்தையர் உறவு, கள் அருந்துதல் கூடா ஒழுக்கம் எனக் கருதப்படவில்லை. "யவனர் குப்பியிற்கொண்டு வரப்பட்ட குளிர்ந்த நறுநாற்றத்தையுடைய தேறலைப் பொன்னாற் செய்யப்பட்ட புனைகலத்தின் கண் ஏந்தி நாடோறும் ஒள்ளிய வளையணிந்த மகளிர் ஊட்டிட உண்டு மகிழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக" என்று நன்மாறன் என்பானை நக்கீரர் வாழ்த்துகிறார்.

சங்க கால அவ்வையார் மிகுந்த அழகான பெண்ணாக அதே நேரத்தில் துணிச்சல் மிக்கவளாய் கள், மது போன்றவற்றை மாந்தியவளாய்த் தென்படுகிறாள். தன்னை மிகவும் ஆதரித்த அதிகமான் நெடுமான் அஞ்சி இறந்த போது கையறுநிலையாகப் பாடப்பட்ட பாடல் ஒன்றுளது.

□சிறியகள் பெறினே எமக்கு ஈயுமன்னே!
பெரியகள் பெறினே
யாம்பாட தான்மகிழ்ந்து உண்ணுமன்னே!□ (புறம் 235)

குறைவாகக் கள் கிடைத்தால் எனக்குத் தந்துவிடுவானே! நிறைய கள் கிடைத்தால் நான் பாட அவன் மகிழ்ந்து அருந்துவானே! என ஒப்பாரி வைக்கிறார்.

சங்கம் மருவிய காலத்தில் காட்சிகள் மாறுகின்றன. பதிணெண் கணக்கு நூல்களில் முதல் நூலான திருக்குறளில் திருவள்ளுவர் பிறனில் விழையாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை,வரைவின் மகளிர், சூது போன்ற கூடா ஒழுக்கங்களைக் கடுமையாகக் கண்டிக்கிறார். இது பவுத்தம், சமணம் இரண்டின் தாக்கம் எனக் கொள்ளலாம்.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.
(அறத்துப்பால், துறவறவியல், இன்னாசெய்யாமை)

பிறர் உயிர்களுக்கு நாம் ஒரு தீங்கினை(துன்பத்தினை) காலையில் இழைத்தால் நமக்கு ஒரு தீங்கு மாலையில் தானாக தேடி வரும். ஆதலால் பிறருக்குத் தீங்கு செய்யாதே என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

இதனையே இளங்கோ அடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரம் என்ற நூலில் மூன்று முக்கிய உண்மைகளை வற்புறுத்துகிறார்.

1) அரசியலில் தவறு செய்வோர்க்கு அறக்கடவுள் எமனாகும்
2) புகழ்பெற்ற பத்தினியை மேலோர் போற்றுவர்
3) ஊழ்வினை தவறாது தன் பயனை ஊட்டும்

அவரவர் செய்யும் நல்வினைகள் தீவினைகள் எவையும் அவரை விட்டுப் போவது இல்லை □தினை விதைத்தவன் தினை அறுக்கிறான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்□ என்பது பழமொழி. ஒருவன் செய்யும் பழைய வினைகள் அவனைத் தேடி வந்து அடையும், தப்பித்துக் கொள்ள முடியாது.

எமது கெட்ட காலம் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அந்த நாட்டை ஆண்ட தலைவர்களுக்கு அறம் பற்றிய அறிவு இருக்கவில்லை. ஊழ்வினை பற்றிய புரிதல் இருக்கவில்லை. மகிந்த இராசபக்ச குடும்பத்துக்கு இருக்கவில்லை. குறிப்பாக முன்னாள் சனாதிபதி கோட்டாபய அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆட்சிக்கு வந்த இரண்டரை ஆண்டுகளில் அழகான ஒரு தீவை அதலபாதாளுக்குத் தள்ளி அதனைக் குட்டிச் சுவராக்கிவிட்டு இரவோடு இரவாக நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். எவ்வளவு அவமானம்? எவ்வளவு மானக்கேடு? எத்துணை தலைக்குனிவு?

சென்ற மாதம் கூட "நான் 69.5 இலட்சம் மக்கள் வாக்களித்து சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவன். எனது பதவிக் காலம் முடியும்வரை பதவியில் நீடிப்பேன். தோற்றுப் போன சனாதிபதியாக நான் வெளியேற அணியமாக இல்லை" என வாதிட்டார். அப்படி வீராவேசமாகப் பேசியவர் இன்று அவமான முறையில் பலரும் பார்த்துச் சிரிக்கிற மாதிரி நாட்டை விட்டு ஓடித் தப்பியுள்ளார்.

யூலை 13 க்கு முன்னர் - குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்னர் - கோட்டாபய இராசபக்ச தனது பதவியில் இருந்து விலகியிருந்தால் மரியாதையோடு அவர் சென்றிருப்பார். பைத்தியக்காரன், கள்ளன், கொள்ளையன் என்ற வசைமொழிகளுக்கு இலக்கு ஆகாமல் தப்பியிருப்பார்.

முன்னாள் பிரதமர் மகிந்த இராசபக்சாவும் தொடக்கத்தில் இப்படித்தான் அடம் பிடித்தார். "நான் பிரதமர் பதவியில் இருந்து விலக மாட்டேன். விலகச் சொல்லிச் சனாதிபதி கேட்கவும் மாட்டார். மக்கள் ஆதரவு எனக்கு இருக்கிறது" என்றார். ஆனால் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவரைப் பதவி விலகுமாறு கேட்ட போது வேறு வழியின்றி பிரதமர் பதவியில் இருந்து விலகிவிட்டார்.

2009 ஆம் ஆண்டு மே 18 இல் இலங்கை இராணுவம் வி.புலிகளைப் போர்முனையில் தோற்கடித்த போது மகிந்த இராசபக்ச புகழின் உச்சத்தில் இருந்தார். போர் வெற்றிவிழாவை காலிமுகத் திடலில் தடபுடலாகக் கொண்டாடினார். அப்போது மகிந்த இராசபக்ச தன்னை இலங்கையின் மன்னன் ஆக முடிசூட்டிக் கொள்ள ஆசைப்பட்டிருந்தால் அவரது ஆசை நிறைவேறியிருக்கும். 2015 இல் நடந்த தேர்தலில் தோற்றாலும் 2020 இல் நடந்த தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அவரது கட்சி வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது. அவரது அமைச்சரவையில் அவரது குடும்பத்தை சேர்ந்த ஆறுபேர் இடம் பிடித்தார்கள்.

ஆனால் இன்று மகிந்த இராசபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராக அரசியல் களத்தில் இருந்து அகற்றபட்டு வருகிறார்கள். கடந்த மே 09 இல் பசில் இராசபக்ச தனது நிதி அமைச்சர் பதவி, நா.உறுப்பினர் பதவி இரண்டிலும் இருந்து விலகிக் கொண்டார். யூன் 09 இல் மகிந்த இராசபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகினார். இப்போது கோட்டாபய இராசபக்ச தனது சனாதிபதி பதவியை விட்டு விலகத் தள்ளப்பட்டுள்ளார்.

சரியாகவோ பிழையாகவோ மகிந்த இராசபக்சவும் கோட்டாபய இராசபக்சாவும் பலரது கொலைகளோடு தொடர்புள்ளவர்கள் என்ற பிம்பம் பொதுவெளியில் இருக்கிறது. சண்டே லீடர் வார ஏட்டின் பிரதம ஆசிரியர் லசந்தா விக்கிரமதுங்க, ஊடகவியலாளர் ஏக்னேலிகொட, ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாயுதீன், நா.உறுப்பினர் ரவிராஜ் கொலைகளோடு கோட்டாபய தொடர்பு படுத்தப் பட்டுள்ளார். மேலும் அவர்களது ஆட்சியில் 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு குற்றம் சாட்டியள்ளது. பலர் அச்சுறுத்தப்பட்டனர், கடத்தப்பட்டனர் மற்றும் சித்திரவதை செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையினர் தமிழ் ஊடகவியலாளர்கள் ஆவர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடைசிக் கட்டப் போரில் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் முறையான இராணுவ இலக்குகள் என்று மார்தட்டியவர் கோட்டாபய இராசபக்ச. சரணடைந்த தளபதிகள், போராளிகள் எல்லோரையும் சுட்டுத்தள்ளுமாறு கட்டளையிட்டவர்.

தொடர்ச்சி..... 24ம் பக்கம்


SINHA
FROM LION BREWERY SRI LANKA
SINHA
-1881-
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
LAGER
IMPORTED
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

கனடிய செய்திகள் Canadian News

# கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அறிமுகம் செய்யப்பெற்ற கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்"



இலங்கையின் தலைநகராம் கொழும்பில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் கடந்த 12-07-2022 செவ்வாய்க்கிழமை மாலை கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" அறிமுகம் செய்யப்பெற்றது.

முன்னாள் வவுனியா அரசாங்க அதிபரும். இலங்கை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளரும் கலை இலக்கிய ஆர்வலருமான திரு "உடுவை" தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதில் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் வி. தேவராஜ் மற்றும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோர் துணை நின்றனர்.

கனடாவிலிருந்து உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் நேரடியாக இந்த விழாவில் கலந்து கொண்டார். அவருடன் கனடா உதயன் சென்னைப்பிரதிநிதி பிரகாஸ் அங்கு சென்றிருந்தார்.

சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள், புரவலர் ஹாசிம் உமர், "வீரகேசரி" பிரதம ஆசிரியர் எஸ். ஜே. ஸ்ரீகஜன் அவர்கள், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி காண்டீபன், "தினகரன்" பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், விசு கருணாநிதி - சிரேஸ்ட ஊடகவியலாளர், மலையக மக்கள் முன்னணி உப தலைவர் திரு ச. சதீஸ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



அங்கு உரையாற்றிய "வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன்" தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தொடர்ச்சியாக ஒரு வாரப் பத்திரிகையை வெளியிடுவதோடு மட்டுமல்லாது தனது படைப்பிலக்கிய பயணத்திலும் 50வது ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள பத்திரிகையாளர் லோகேந்திரலிங்கத்தை நாம் அனைவரும் பாராட்டவேண்டும் என்றார்.

மேற்படி கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமான படைப்புக்களை எழுதிய சில எழுத்தாளர்களான திரு. கனகசூரியர். திருமதி. பவானி சச்சிதானந்தம், திருமதி. சாஹிரி ஆகியோர்க்கு அதன்பிரதிகள் பிரதம ஆசிரியரால் வழங்கப்பெற்றன.

சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள், புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் உதயன் பிரதம ஆசிரியரை கௌரவித்தனர். அத்துடன் திரு. உடுவை தில்லை நடராஜா மற்றும் திரு. வீ. தேவராஜ் ஆகியோர் இணைந்து பாராட்டுக் கேடயம் ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.










ALLSTATE'S
2022 NATIONAL CHAMPION AWARD WINNER!

# RONALD ANTON

Allstate Trusted Advisor and Agent



GET A FREE QUOTE

FOR AN EXCLUSIVE DISCOUNT, PLEASE CALL:

**416.846.6479**

Allstate.
You're in good hands.

உங்கள் வீடு, வாகண காப்புறுதி தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
தமிழிலும் உரையாடலாம்

# Carefirst Family Health Team


## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

# வந்து விட்டது!!

1%
குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
Lowest Interest in GTA

# எங்களது புதிய கிளை
# ஜீலை 4 முதல் உதயம்!

# Pawn Bank Inc.

Your Satisfaction is Our Success

# உடனடி நகைக்கடன்

**இந்த சலுகை: (FINCH & MCCOWAN)**
**1571 SANDHURST CIRCLE #159D,**
**SCARBOROUGH - M1V1V2.**
**மட்டும் பொருந்தும்**

## தொடர்புக்கு: 416-754-7198

முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

**KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613 EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198**

# தமிழறிஞர்களுக்கு வீடுகள் வழங்குவதில் தமிழக அரசு பாரபட்சம்: சீமான் குற்றச்சாட்டு



''தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றிய சான்றோர் பெருமக்களுக்கு நியாயமாக சேர வேண்டிய உரிமையைத் தரமறுத்து, அதிலும் தமிழ்நாடு அரசு பாகுபாடு பார்க்கிறது என்கிற குற்றச்சாட்டு ஏற்கவே முடியாத பெருங்கொடுமையாகும்'' என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "இந்திய மத்திய, மாநிலங்கள் மற்றும் பன்னாட்டு அளவில் வழங்கப்பெறும் இலக்கியத்திற்கான உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துப் பல மாதங்களாகியும், எழுத்தாளர்கள் பலருக்கும் இதுவரை வீடுகள் வழங்காமல் தமிழ்நாடு அரசு காலந்தாழ்த்தி வருவது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. தமிழ் அறிஞர்களுக்கு வீடுகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு பாரபட்சம் காட்டுவது வன்மையான கண்டனத்திற்குரியது. தமது அளப்பரிய எழுத்துத் திறத்தாலும், கற்பனை வளத்தாலும், அறிவாற்றலாலும் காலத்தால் அழியாத காவியங்கள் படைத்து அன்னைத் தமிழுக்குப் பெருமை சேர்த்த தமிழறிஞர் பெருமக்கள் வறுமையில் வாடுவதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நிரந்தர வாழ்விடம் அமைத்துக் கொடுத்து, அவர்களது துயரமிக்க வாழ்வில் சிறிதளவினையாவது துடைக்கத் தமிழ்நாடு அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது.

இருப்பினும், அதிலும் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வீடுகள் உடனடியாக வழங்கப்படுவதும், சிலரினை தொடர்ந்து காத்திருப்புப் பட்டியலில் வைத்திருப்பதும், பலருக்கு வீடுகள் வழங்க மறுப்பதும் திமுக அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையே வெளிப்படுத்துகிறது.உயிர்நிகர் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றிய சான்றோர் பெருமக்களுக்கு நியாயமாக சேர வேண்டிய உரிமையைத் தரமறுத்து, அதிலும் தமிழ்நாடு அரசு பாகுபாடு பார்க்கிறது என்கிற குற்றச்சாட்டு ஏற்கவே முடியாத பெருங்கொடுமையாகும்.ஆகவே, திமுக அரசு தமிழறிஞர் பெருமக்களுக்கு 'கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுவதில் எவ்வித அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கும் இடமளிக்காமல், தமிழ் இலக்கியத்திற்கான தமிழ்நாடு அரசின் விருதுகள், இந்திய மத்திய அரசின் விருதுகள் மற்றும் பன்னாட்டு உயரிய விருதுகள் பெற்ற தமிழறிஞர்கள் அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்து விரைந்து வீடுகள் வழங்க வேண்டும்.

குறிப்பாக அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதை கைவிட்டு, வீடு மற்றும் நிலமில்லாது உண்மையிலேயே வறுமையில் வாடும் எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

# அதிமுக அலுவலக சீலை அகற்றக் கோரிய வழக்கில் சிசிடிவி ஆதாரங்களை தாக்கல் செய்ய உத்தரவு: சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணை



அதிமுக தலைமை அலுவலகத்துக்கு வைக்கப்பட்ட சீலை அகற்றக்கோரி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்துள்ள வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி என்.சதீஷ்குமார், ஜூலை 11ம் தேதி அப்பகுதியில் உள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் வீடியோ ஆதாரங்களை இன்று தாக்கல் செய்ய போலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். கடந்த 11ம் தேதி ராயப்பேட்டை அதிமுக தலைமை அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் ஓபிஎஸ், இபிஎஸ் ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இரு தரப்பிலும் கற்களை வீசி தாக்கிக் கொண்டனர்.

இதனால் சட்டம் ஒழுங்குபிரச்சினையை காரணம் காட்டி,அதிமுக தலைமை அலுவலகத்துக்கு வருவாய் கோட்டாட்சியர் சீல் வைத்தார்.இந்த சீலை அகற்றக் கோரி அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலாளர் என்ற முறையில் பழனிசாமியும், அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பொருளாளர் என்ற முறையில் ஓ.பன்னீர்செல்வமும் அதிமுக தலைமை அலுவலகத்துக்கு சொந்தம் கொண்டாடி தனித்தனியாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.நீதிபதி என்.சதீஷ்குமார் முன்புஇந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நடந்த வாதம்: பழனிசாமி தரப்பில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண்: அதிமுகபொதுக்குழு கூட்டம் நடந்தபோதுகட்சித் தலைமை அலுவலகத்துக்குள் சமூக விரோதிகள் நுழையக்கூடும் என்பதால் பாதுகாப்பு கோரிகாவல் துறைக்கு முன்கூட்டியே மனு அளித்தோம். அதன்பிறகும் போதிய பாதுகாப்பு தராததாலேயே வன்முறை வெடித்தது. ஓ.பன்னீர்செல்வம், கட்சித் தலைமை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து கணினி, கோப்புகளை எடுத்துச் சென்றுவிட்டார். அவர் தற்போது ஒருங்கிணைப்பாளர் கிடையாது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டு விட்டார். கலவரத்தை தடுக்காமல் போலீஸார் வேடிக்கை பார்த்தனர்.

அதிமுக தலைமை அலுவலகத்தை பொருத்தவரை, கட்சி விதிகளின்படி தலைமை நிலையச்செயலாளர்தான் அதன் பொறுப்பாளர். பிரதான எதிர்க்கட்சியின் அலுவலகத்தை பூட்டி சீல் வைத்தது ஜனநாயக விரோதம்.ஓ.பன்னீர்செல்வம் தரப்பில்மூத்த வழக்கறிஞர் ஏ.ரமேஷ்: கட்சியின் ஒருங்கிணைப்பாளராகவும், பொருளாளராகவும் ஓ.பன்னீர்செல்வம் பதவி வகித்து வருகிறார்.அவர் கட்சி அலுவலகத்துக்கு செல்லஎந்த தடையும் இல்லை. எதிர் தரப்பினர் கட்சி அலுவலகத்தை பூட்டிஉள்ளே நுழைவதை தடுத்ததால்தான் பிரச்சினை உருவானது. ஓ.பன்னீர்செல்வம் பழனிசாமி இடையிலான பிரச்சினையை வேறு வழிகளில்தான் தீர்க்க முடியும். அவர்கள்சிவில் நீதிமன்றத்தை நாட அறிவுறுத்த வேண்டும். ஆனால்,கட்சி அலுவலகத்துக்கு வருவாய் கோட்டாட்சியர் சீல் வைத்தது இயந்திரத்தனமானது. எனவே, சீலை அகற்றி கட்சியின் ஒருங்கிணைப்பாளரான ஓ.பன்னீர்செல்வம் வசம் ஒப்படைக்க வேண்டும்.

காவல் துறை தரப்பில் கூடுதல்குற்றவியல் வழக்கறிஞர் ராஜ் திலக்: ஓ.பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் கட்சி அலுவலகத்துக்கு ஊர்வலமாக செல்வதை போலீஸாரால் தடுக்கமுடியவில்லை. இது அதிமுகவுக்கும், போலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை அல்ல.அதிமுகவின் இரு பிரிவினருக்கு இடையே திடீரென ஏற்பட்ட உள்கட்சி மோதல். இருந்தபோதும் 300க்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டு உடனடி நடவடிக்கைஎடுத்ததால்தான் வேறு அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. இவ்வாறு வாதம் நடந்தது.அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி என்.சதீஷ்குமார், ''கடந்த ஜூலை 11ம் தேதிகாலை முதல் மாலை வரை அப்பகுதியில் நடந்த சம்பவங்கள்குறித்து சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் வீடியோ ஆதாரங்களுடன் போலீஸார் விரிவான அறிக்கையை ஜூலை 15ம் தேதி (இன்று) தாக்கல் செய்ய வேண்டும்'' என உத்தரவிட்டு விசாரணையை இன்று பிற்பகலுக்கு தள்ளிவைத்தார்.

இன்று மீண்டும் விசாரணை நடக்கிறது.14 பேரின் ஜாமீன் மனு தள்ளுபடிஇதற்கிடையே, அதிமுக அலுவலக மோதல் சம்பவம் தொடர்பாக கைதான 14 பேரின் ஜாமீன் மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.அதிமுக தலைமை அலுவலகத்தில் கடந்த 11ம் தேதி ஓபிஎஸ் இபிஎஸ் ஆதரவாளர்கள் இடையே மோதல் வெடித்தது. கலவரத்தில் ஈடுபட்டதாக இரு தரப்பிலும் 400 பேர் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்து பலரை கைது செய்தனர்.இந்த வழக்கில் கைதான 14 பேர் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

முதன்மை அமர்வு நீதிபதி எஸ்.அல்லி முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஜாமீன் மனுக்களை வாபஸ் பெறுவதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்ற நீதிபதி, ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## தமிழக முதல்வர் ஸ்டாலின் மருத்துவமனையில் அனுமதி





கரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவப் பரிசோதனைக்காக காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த 12 ஆம் தேதி கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் மருத்துவப் பரிசோதனைக்காக அவர் இன்று காலை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிடி ஸ்கேன் உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்படும் என்று கூறப்படுகிறது. மேலும் மருத்துவப் பரிசோதனை முடிந்து உடனடியாக அவர் வீடு திரும்புவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பாமக நிறுவனர் ராமதாஸுக்கு கரோனா


பாமக நிறுவனர் ராமதாஸுக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பபட்டுள்ளது.பாமக நிறுவனர் ராமதாஸ் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "நேற்று முதல் தொண்டை வலியால் பாதிக்கப்பட்டிருந்த எனக்கு இன்று மாலை கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. தைலாபுரம் தோட்ட இல்லத்தில் என்னை நான் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

கரோனா தொற்று வேகமாக பரவத் தொடங்கியுள்ள நிலையில், மக்கள் அனைவரும் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும். தவணை தவறாமல் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்'' என்று அந்தப் பதிவில் கூறியுள்ளார்.



# "வீரகேசரி கார்மேகத்தின் வாழ்வினை எழுத்தினில் பதிவு செய்த முயற்சி ஈழத்தின் முன்னோடி இலக்கியச் செயற்பாடாகும்."

## லண்டன் வெளியீட்டு விழாவில் மு.நித்தியானந்தன்




"எழுத்தையே தொழிலாக, வாழ்வாகக் கொண்ட பத்திரிகையாளர்கள் நமது சமூகத்தில் கவனிப்பாரற்றுப் போய்விடுகிறார்கள். அவர்களது வாழ்க்கையைப் போற்றுவார் யாருமில்லை. இந்நிலையில் வீரகேசரியிலும், தமிழகத்தின் தினமணியிலும் ஆசிரியர்பீடத்தை அணி செய்த எஸ்.எம்.கார்மேகத்தின் வாழ்வினை எழுத்தினில் பதிவு செய்த முயற்சி ஈழத்தின் முன்னோடி இலக்கியச் செயற்பாடாகும்.

"பத்திரிகையாளர் எஸ்.எம். கார்மேகம் - வாழ்வும் பணியும்" என்ற நூலினைத் தொகுத்து வழங்கியிருக்கும் எச்.எச்.விக்கிரமசிங்கவின் பணி, "காலம் போற்றும் சிறந்த பணியாகும்" என்று மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தன் லண்டன் வெம்பிளி தமிழ் நிலையத்தில் சென்ற ஜூன் 26 ஆம் திகதி நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் நூல் வெளியீட்டு அரங்கில் பத்திரிகையாளர் எஸ். எம்.கார்மேகம் - வாழ்வும் பணியும் இரண்டாம் பதிப்பினை வெளியிட்டு, உரையாற்றிய போது தெரிவித்தார்.

"வெறும் சம்பளத்திற்காக வேலை பார்க்கும் தொழிலாகக் கருதாமல், வீரகேசரியில் தனது பணியை ஆத்மார்த்தமாக செய்து, மலையக ,லக்கியத்திற்கு வளம் சேர்த்த கார்மேகம் அவர்களை அறிந்த, அவரோடு பணியாற்றிய பல பத்திரிகையாளர்களையும், மேலும் பல ஆளுமைகளையும் ,னங்கண்டு இந்நூலைத் தொகுத்து வழங்கியமை விக்கிரமசிங்க அவர்களின் சிறந்த தொடர்பு வட்டத்தினையும், எடுத்துக்கொண்ட பணியினைத் திறம்பட முடிக்கும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது" என்று அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.



"கண்டி மன்னர்கள்", "ஈழத்தமிழர் எழுச்சி", "ஒரு நாளிதழின் நெடும் பயணம்" ஆகிய நூல்களையும் எழுதிய ஆய்வாளராகவும் எனது தந்தை திகழ்ந்தார். பத்திரிகைப் பணியிலும் பொது வாழ்விலும் முழு நேரத்தைச் செலவிட்டாலும் குடும்ப உறவினையும் பண்போடும் பாசத்தோடும் அரவணைத்துச் செல்லும் ஒருவராக அவர் எங்கள் நெஞ்சில் என்றும் "குடியிருப்பார்" என்று அவுஸ்திரேலியாவில் வாழும் கார்மேகத்தின் புதல்வி கனகா கணேஷ் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "எனது தந்தை பத்திரிகையாளர் கார்மேகம் அவர்களின் பத்திரிகை சாதனைகளை ஆவணப்படுத்துமுகமாக "வாழ்வும் பணியும்" என்ற இந்த நூலின் இரண்டாம் பதிப்பு கடந்த ஜூன் 11ம் திகதி லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் மு.நித்தியானந்தன் விமர்சன உரை நிகழ்த்தியது எங்களுக்கு பெருமை தரும் நிகழ்வாகும்.



இன்று லண்டன் Wembley புத்தக கண்காட்சியில் என்னையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள செய்து கௌரவித்ததை எனது பாக்கியமாகவே கருதுகிறேன். ஏற்பாட்டாளருக்கும் எனது நன்றிகள். இந்நூலில் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன் முன்னுரையும், தினகுரல் வார வெளியீட்டின் முன்னாள் பிரதம ஆசிரியர் பாரதி இராஜ நாயகம் அவர்கள் அணிந்துரையும் தந்துள்ளனர்.

உள்ளடக்கமாக எனது தந்தையுடன் 1960 முதல் தொடக்கம் பழகிய நண்பர்கள் உடன் பணியாற்றியவர்கள் உட்பட 46 பேர்களின் அரிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. எனது தந்தையைப் பற்றிய இந்நூலிற்கான ஆக்கங்களை கேட்டவுடனேயே அவரவது பரபரப்பான பணிகளுக்கிடையில் சிரமேற்கொண்டு எழுதி கொடுத்ததை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

இந்நூலில் திரு. மு.நித்தியானந்தன் அவர்களும் என் தந்தையை பற்றி யகாத்திரமான கட்டுரையை வடிவமைத்து தந்துள்ளார். அவருக்கும் எனது நன்றிகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் தந்தையைப் பற்றி எங்களுக்கே தெரியாத நிறைய விடயங்கள் நாங்கள் ஆவணப்படுத்த மிக உதவியாக இருந்தது அவர்களது ஆக்கங்களே. மேலும் "நினைவினில் வாழும் இனிய தந்தை" என்ற தலைப்பில் எனது கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.



இந்நூலின் முதற் பதிப்பு 2018 ஆண்டு நிறைவடைந்த நிலையில் கம்போடிய உலக தமிழர் மாநாட்டில் முன்னாள் அமைச்சரும் இலங்கை மலையக முன்னணி தலைவருமான வே. இராதா கிருஷ்ணன் தலைமையிலும் பின்பு புதுடில்லி பிரவாசி பாரதீய யுக கேந்திரா நிலையத்தில் கோபியோ அமைப்பின் சர்வதேச மாநாட்டில் மலேசிய தலைவர் செல்வராஜ் அவர்களது தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது.

எனது தந்தை கார்மேகத்தின் பணிகளும் சேவைகளும் காற்றோடு கலந்து கரைந்து விடா வண்ணம் அவர் பற்றிய தகவல்களை தகுந்தவர்கள் மூலம் கட்டுரை வடிவில் ஆக்கங்களாக சேகரித்து ஆவணப்படுத்தி ஒரு புத்தகமாக பதிப்பித்து அதனை மேலும் அலங்கரிக்கும் வண்ணம் வெளியீடு செய்து எங்கள் கரங்களில் தவழ வைத்த பெருமை எச்.எச். விக்கிரமசிங்க அவர்களை மட்டுமே முழுக்க முழுக்க சாரும்.

இலங்கையின் இன்றைய கடும் பொருளாதார நெருக்கடியில் யாரிடமும் எவ்வித பொருளுதவியும் எதிர்பார்க்காமல் ஒரு நூலினை பதிப்பிப்பதில் உள்ள சிரமங்களை நான் சொல்லத்தேவையில்லை. ஆனால் அதனை என் தந்தைக்காற்றும் கடமையாக அவர் முன்னின்று செயல்பட்டமைக்கு தலை வணங்குகிறேன்.



என் தந்தை கார்மேகம் மறைந்து 17 வருடங்களுக்கு மேல் ஆகி விட்ட போதிலும் அவர் அனைவராலும் இன்றும் நினைவு கூறப்படுகின்றார் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எம்.ஜெயசீலன் மீள்பிரசுரம் செய்த கோ.நடேசய்யர் எழுதிய "இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்" என்ற நூலை பதிப்பித்து வெளியிட்டமையைப் பாராட்டி மு.நித்தியானந்தன் உரையாற்றினார்.

இவ்விரு நூல்களையும் இவ் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக விருந்தினராக கலந்து கொண்ட எச்.எச்.விக்கிரமசிங்க இ.பத்மநாப ஐயருக்கு வழங்கி கௌரவித்தார்.

**தொகுப்பு - லிங்கநகர் சண்முகநாதன் கணேஷ்**

# கீதையின் நாயகன்

**- உமா மோகன் -**

*கீதையின் நாயகன் – இவன்*
*கோதையின் காதலன்*

*பார்த்தனுக்குச் சாரதி – பாரத*
*போருக்குச் சூத்திரதாரி*

*கண்ணாலே கவர்ந்திடுவான்*
*புன் சிரிப்பாலே மயக்கிடுவான்*

*தெரிந்தும் சேட்டைகள் பல*
*தெரியாதது போல் செய்திடுவான்*

*புரிந்தும் பிறர் துயர்*
*அறியாதது போல் நடந்திடுவான்*

*தூண்டிவிட்டுத் துயர் கொடுப்பான் – பின்*
*துணைக்கும் தானே போயிடுவான்*

*மன்றாடும் வரை பார்த்திருந்து – பின்*
*மானத்தையும் காத்திடுவான்*

*திண்டாடுவோர் நிலை கண்டால்*
*கண் காணாமலும் உதவிடுவான்*

*வேண்டாதவர் ஆகிவிட்டால்*
*கொண்டாடாதும் இருந்திடுவான்*

*இசைப் பிரியன் இவன்*
*இசைத்து விட்டால் – புல்லாங்குழல்*

*மயங்கிடுமே மாக்களும் தான்.*

*– கண்ணன்*

*கலங்கிடும் மனங்களுக்கு – நல்ல*
*சுகங்களும் அவன் கொடுப்பான்*

*பயந்தனைப் போக்கவே – பக்கத்*
*துணையாக அவன் இருப்பான்.*

*அன்று,*

*கணவனா கள்வன் என்று*
*கடும் கோபம் கொண்டவளின்*
*இடும் சாபம் வரும் முன்பே*

*மதுரையிலே மாதுரியின் வீட்டினிலே*
*"குடத்துப் பால் உறையவில்லை (தயிருக்கு)*
*வெண்ணையும் தான் உருகவில்லை*
*ஆட்டுக்குட்டிகளும் துள்ளவில்லை,*
*மாடுகளும் அசை போடவில்லை,*
*கழுத்தில் மணிகளையும் தான்*
*காணவில்லை" – இவை*

*துர்க்குறிகள் என்று எண்ணி*
*அச்சம் கொண்ட மாதுரியும் – மகள்*

*ஐயையோடு ஆய்ச்சியரைத் தான் அழைத்து*
*கண்ணனையே நடு நிறுத்தி*
*குரவைக் கூத்து ஆடுவித்தாள்– அங்கு*

*அச்சம் போக்க மாதவனை மங்கையர்*
*இச்சையுடன் மனத்திருத்தி ஆடினராம்*
*குரவைக் கூத்து.*

*கூத்தும் ஆடிக் குதூகலிப்பான் – வலுவான*
*வார்த்தை சொன்ன கண்ணன் இவன்.*




# கோத்தாபய ராஜபக்ச தப்பித்தது எப்படி?

## - கனடா உதயனின் சிறப்பு புலனாய்வு கட்டுரை

கடற்படை தளபதியின் வீட்டில் ஒளிந்திருந்தே கோத்தாப ராஜபக்ச நாட்டிலிருந்து தப்பியோடினார் என்பது கனடா "உதயனின்" சிறப்பு புலனாய்வில் தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற மக்கள் புரட்சியால் பதவியிலிருந்து விரட்டப்பட்ட கோத்தாபய ராஜபக்ச எப்போது எப்படி நாட்டிலிருந்து வெளியேறினார் என்பது குறித்து "உதயனின்" சிறப்பு புலனாய்வு கண்டறிந்துள்ளது. அவர் இராணுவ விமானம் ஒன்றில் கொழும்பிலிருந்து மாலத்தீவிற்கும் பிறகு அங்கிருந்து சவுதி விமானம் ஒன்றில் சிங்கபூருக்கும் சென்றார் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆனால், கடந்த சனிக்கிழமை ஜூலை 9 அன்று போராட்டக்காரர்கள் அதிரடியாக ஜனாதிபதி மாளிகையில் நுழைந்த போது அங்கு அவர் இல்லை. அந்த மாளிகை ஆளில்லாத ஒன்றாக காட்சியளித்தது. "அரகலிய" மக்கள் அங்கு செல்வதற்கு முன்னர் அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார். அவர் எங்கிருந்தார், அங்கிருந்து எப்படி வெளியேறினார் என்பது புரியாத புதிராகவே இருந்தது.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு உள்நுழைவார்கள் என்பது உறுதியானவுடன் கோத்தாபய ராஜபக்ச, முதல் 50 மணி நேரம் தலமறைவாக வாழ்ந்த போது தரைப் படையை நம்பாமல் கடற்படையிடமே தஞ்சம் புகுந்தார்.

போர் காலத்திலும் பல இரகசிய நடவடிக்கைகளிற்கு கோத்தா இராணுவத்தை விடவும் கடற்படையினரையே பெரிதும் நம்பினார். இதேபோல் மக்களின் ஆதரவை இழந்த நிலையில், பதவி விலகுமாறு மக்கள் வலியுறுத்தியதன் பின்னணியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தனது மனைவி, பாதுகாப்பு உத்தியோகத்தருடன் நாட்டிலிருந்து 13 ஆம் திகதி அதிகாலை இரகசியமாக வெளியேறி விமானப்படையின் அன்டனோ 32 (ஏ.என். 32) ரக விமானத்தில் மாலதீவின் தலைநகரான மாலேவுக்கு அவர் வெளியேறியதாக விமானப்படை ஊடகப் பணிப்பாளர் விங் கொமாண்டர் துஷான் விஜேசிங்க அறிக்கை ஊடாக உறுதி செய்யும் வரையில் அதாவது கடந்த ஜூலை 9 ஆம் திகதி முதல் சுமார் 50 மணி நேரம் தனக்கு வாக்களித்த மக்கள் முன் தோன்ற முடியாது தலைமறைவாக கடற்படை முகாம்களுக்குள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்க்சா தலைமறைவு வாழ்வு நடாத்தினார்.

ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரதமர் ரணில் விக்ரமசிங்க (தற்போதைய பதில் ஜனாதிபதி) ஆகியோரை பதவி விலக வலியுறுத்தி பல இலட்சம் மக்கள் கோட்டை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகையை சுற்றி வளைத்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதன்போது கோத்தாபய ராஜபக்ச தனது ஜனாதிபதிபதி மாளிகையிலேயே இருந்துள்ளார். முற்பகல் 10.30 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையிலேயே அவர் ஜனாதிபதி மாளிகையை கைவிட்டு தப்பிச் சென்றிருக்க வேண்டும் என தற்போது கூறப்படுகின்றது. இதன் போது ஜூலை 8 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் அவரது பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் பத்தரமுல்லையில் உள்ள முப்படை தலைமையகத்துக்கு சென்று, ஜனாதிபதி கோட்டாவை பாதுகாப்புக்காக அங்கு அழைத்து வந்துள்ளதாக போலியான தகவல் ஒன்றை பரவச் செய்து போராட்டக்காரரின் கவனம் திசை திருப்பப்பட்டுள்ளது.

இருந்தபோதும் ஜனாதிபதி மாளிகைக்கு செல்லும் அனைத்து வீதிகளும் நிரந்தர வீதித் தடைகளைக் கொண்டு மூடப்பட்டு, இராணுவம் பொலிஸ், விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பும் போடப்பட்டது.

இதேநேரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்கசா ஜனாதிபதி மாளிகையில் 9 ஆம் திகதி காலையில் தங்கியிருந்தமையினால், 8 ஆம் திகதி இரவு முதல் கொழும்பின் பல பகுதிகளுக்கு ஊரடங்கை பிறப்பிக்க பொலிஸ்மா அதிபருக்கு உயர்மட்ட உத்தரவு பிரயோகிக்கப்பட்ட போதும் அதனைச் செய்ய வேண்டாம் என பொலிஸ்மா அதிபருக்கு பொலிஸ் உயரதிகாரிகள் பலர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதன் பின்புலத்தில் ஜூலை 9 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சா பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவை சந்தித்துள்ளார். இதன்போது பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன பொலிஸ் திணைக்களத்தில் தனக்கு மிகவும் விசுவாசமான முன்னாள் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்னவையும் உடன் அழைத்துச் சென்றுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவர் எனவும் கண்ணீர் புகை மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியேனும் அதனைச் செய்வர் எனவும் ஜனாதிபதி திடமான நம்பிக்கையுடன் இருந்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு ஜூலை 9 ஆம் திகதியன்று இலங்கை தரைப் படையின் மேஜர் ஜெனரலின் கீழிருந்தது. முற்பகல் வேளையில், மாளிகையை போராட்டக்காரர்கள் இலட்சக் கணக்கில் முற்றுகையிட ஜனாதிபதி தரைப் படையின் மீதுள்ள நம்பிக்கையை இழந்துள்ளார். உடனடியாக கடற்படை தளபதியை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து கடற்படை தளபதியின் காரில் ஏறி தப்பித்துள்ளார். தரைப்படையால் தன்னை பாதுகாப்பாக மீட்டு காப்பாற்ற முடியாது என்ற முடிவிற்கு வந்த அவர் அவர்கள் மீது நம்பிக்கையிழந்து கடற்படையின் தளபதியை அழைத்தார் என்று இது குறித்து அறிந்த ரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஜனாதிபதி மாளிகையின் வாயில் திசையிலிருந்து தொடர்ச்சியாக கண்ணீர்ப் புகைப் பிரயோகம் முன்னெடுக் கொண்டிருந்த போதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கடற்படை தளபதியின் காரில் ஏறித் தப்பி, கடற்படை தளபதியின் உத்தியோகபூர்வ விடுதிக்கு சென்றிருக்க வேண்டும் என தற்போது நம்பப்படுகின்றது.

இதன் பிறகே கடற்படை தளபதியின் உத்தியோகபூர்வ அறையிலிருந்து, கடற்படை தலைமையகமான ரங்கள முகாம் சென்று அங்கிருந்து சிதுரல, கஜபாகு ஆகிய கப்பல்களில் திருகோணமலையை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

அவ்வாறே ஜனாதிபதி கோத்தாபாய திருகோணமலை கடற்படை முகாம் நோக்கி சென்றார் என்று தகவலறிந்த நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திருகோணமலையில் இருந்த ஜனாதிபதி மறு நாளான ஜூலை 10 ஆம் திகதி விமானப்படையின் ஓர் பெல் ரக உலங்கு வானூர்தியில் கட்டுநாயக்க விமானப்படை தளத்துக்கு இடம்மாறியுள்ளார்.

ஜூலை 10 ஆம் திகதி கோத்தாபய ராஜபக்ச துபாய் நோக்கி பயணிக்க இருமுறை முயன்ற போதும் குடிவரவு அதிகாரிகள் முறைப்படி விமானத்தில் செல்ல முடியும் என அறிவித்த நிலையிலும், பொது மக்கள் முன்னால் தோன்ற அவருக்கு இருந்த அச்சத்தினால் அவரால் அப்போது வெளிநாடு செல்ல முடியவில்லை.

இதனிடையே அமெரிக்கா செல்வதற்காக கோத்தாபய முன்வைத்த விசா விண்ணப்பத்தை அமெரிக்கா நிராகரித்து விட்டது. இதை அவர் சிறிதும் எதிர்ப்பார்க்கவில்லை. தனது பாரியார் மற்றும் மகன் ஆகியோர் அமெரிக்க பிரஜைகளாக இருக்கும் நிலையிலும், தான் முன்னர் அந்நாட்டுப் பிரஜையாக இருந்ததால் தனக்கு அமெரிக்க விசா கிடைப்பதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்று அவர் உறுதியாக நம்பினார். எனினும் அந்த நம்பிக்கை பொய்த்து போன நிலையில் கட்டுநாயக்கவில் இருந்து மத்தள விமான நிலையம் ஊடாக தனியார் விமானத்தில் துபாய் செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்நடவடிக்கையும் செவ்வய்க்கிழமை (12) வரை சாத்தியப்படவில்லை.

இதற்காக கட்டுநாயக்க விமானப் படைத் தளம் முதல் இரத்மலானை விமானப்படைத் தளம் வரை சென்ற கோத்தா கட்டுநாயக்கவுக்கே மீண்டும் திரும்பும் நிலமை ஏற்பட்டது.

இதன்பின்னரே கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்டி அமைந்துள்ள விமானப்படை ஓடுபாதையில் இருந்து கோட்டா மாலத்தீவு நோக்கி இரகசியமாக 13ஆம் திகதி அதிகாலை புறப்பட்டு சென்றுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய தகவல்களின் பிரகாரம் அன்ரனோ 32 ரக விமானம் ஒன்று குடிவரவு குடியகல்வு அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் ஆகியோர் உரிய ஆவணங்களை சரிபார்த்து உறுதிப் படுத்திய பின்பே மாலத்தீவு நோக்கி செல்ல அனுமதிக்கப்பட்டது என்கின்றனர்.

அவர் நாட்டிலிருந்து மாலத்தீவு சென்று சிங்கப்பூர் சென்றடையும் வரை கடற்படை பெரும் பங்காற்றியுள்ளது இப்போது தெரிய வந்துள்ளது. போர்க் காலங்களிலும் கூட அவர் தரைப்படை, விமானைப்படையைக் காட்டிலும் பெரும்பாலும் கடற்படையையே நம்பி வந்தார். கடற்படை ஊடகவே பல நகர்வுகளை அவர் முன்னெடுத்தார், அதில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமேந்தி வந்த கப்பலை நடுக்கடலில் அழித்த சம்பங்களும் உண்டு என்று பாதுகாப்பு விடயங்கள் குறித்த பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர். அதே போன்று போர்க் காலத்தில் பலரை கடத்தவும், காணாமல் ஆக்கவும் அவர் கடற்படையினரையே பெரிதும் நம்பியிருந்தனர் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது சிங்கப்பூரில் இருக்கும் "அவர் அகதி தஞ்சம் கோரவில்லை" அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக கோரிய விசா அனுமதியே இப்போது வழங்கப்பட்டுள்ளது என்று சிங்கப்பூர் அதிகாரிகள் கூறுகின்றனர். அவர் அங்கு மருத்து பரிசோதனைக்காகச் சென்றுள்ளார் என்று அறிய முடிகிறது. அந்த பரிசோதனைகள் முடிந்த பிறகே அவர் அடுத்து எங்கு, எப்படிச் செல்லவுள்ளார் என்பது தெரியவரும்.

இதேவேளை ஜனாதிபதியின் இந்த இரகசிய பயணத்துக்கு இந்தியாவினால் உதவிகள் வழங்கப்படுவதாக வெளியான தகவல்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

இதேநேரம் இலங்கை விமானப்படை விமானத்தில் இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்கசா இருக்கின்றார் என அறிந்த மாலை தீவு அதிகாரிகள் முதலில் அனுமதியளிக்காதிருந்துள்ளனர். இதனால் கோட்டாவும் அவரது மனைவி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் சுமார் ஒன்றரை மணி நேரம் விமானத்தில் காத்திருந்துள்ளனர். பின்னர் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹம்மட் நீட் தலையீடு செய்து தரை இறக்குவதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளார்.




Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

கனடிய செய்திகள்
Canadian News

# மொன்றியால் வாழ் கௌரீஸ் தனது தாயாருடன் இணைந்து வழங்கிய "விடியலைத் தேடி" இன்னிசை நிகழ்ச்சியும் இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வும்











கனடா - மொன்றியால் வாழ் இளம் பாடகரும் தாயகத்தில் வாழும் கண்பார்வையற்ற சிறார்களுக்கும் உதவும் வகையில் செயற்படுகின்றவருமான கௌரீஸ் தனது தாயாருடன் இணைந்து வழங்கிய "விடியலைத் தேடி" இன்னிசை நிகழ்ச்சியும் இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வும் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

கனடாவின் சிறந்த இசைக்குழுவான "மெகா ரியுனர்ஸ்" நிறுவனர் அரவிந்தன் அவர்களின் இசையில் இனிய பாடல்களை இளம் பாடகர் கௌரீஸ் மற்றும் ஏனைய ரொறன்ரோ - மொன்றியால் வாழ் பாடக பாடகிகள் ஆகியோர் பாடி சபையோரை மகிழ்வித்தார்கள்.
நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் தொகுத்து வழங்கினார் அறிவிப்பாளர் இளங்கோ அவர்கள்.

"விடியலைத் தேடி" இசைத் தட்டின் வெளியீட்டு விழாவில் இசைத்தட்டு வெளியீட்டை உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர் பாரியார் ஆகியோர் வெளியிட்டு வைத்தார்கள். தொடர்ந்து இசைத்தட்டுப் பிரதிகள் பல அன்பர்களுக்கு மேடையில் வழங்கப்பெற்றன.

மேற்படி இசைத் தட்டில் அடங்கியுள்ள பாடல்களை கனடா வாழ் கவிஞர் அகணி சுரேஸ் மற்றும் கவிஞர்கள் எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அங்கு சபையோர் மத்தியில் உரையாற்றிய இளம் பாடகர் கௌரீஸ் அவர்கள் தனது இசைப் பயணம் மற்றும் வாழ்க்கைப் பயணம் ஆகியவற்றுக்கு தனது தாயார் சாரதா அம்மையார் அவர்களே பக்கத் துணையாகவும் முதுகெலும்பாகவும் இருந்து வருகின்றார் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து இந்த "விடியலைத் தேடி" இசை நிகழ்ச்சி சிறந்த முறையில் நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் கணக்காளர் குமார் தம்பியப்பா. சங்கர் நல்லதம்பி தம்பதி மற்றும் மெஜஸ்ரிக் சிட்டி தமிழர் உள்ளக அங்காடியின் பொது முகாமையாளர் கிறிஸ் சிவக்கொழுந்து ஆகியோர்க்குரிய கௌரவம் வழங்கப்பெற்றன.



14ம் பக்கம் தொடர்ச்சி.....

சென்ற தேர்தலில் 69 இலட்சம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்ற கோட்டாபய இன்று நாட்டில் இல்லை. நாட்டை விட்டு ஓடிவிட்டார். தேர்தலில் படு தோல்வியடைந்து தேசியப் பட்டியலில் வந்த விக்கிரமசிங்க பதில் சனாதிபதியாகி விட்டார். இதைத்தான் ஊழின் விளையாட்டு என்று சொல்வதா?

காலிமுகத் திடலில் இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் இலங்கை அரசியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. அரசியல்வாதிகள் ஊழல்வாதிகள் நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்தவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கைகள் பொதுமக்களது ஆதரவைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக இந்தப் போராட்டம் சிங்களவர், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஒன்று படுத்தியுள்ளது. இன, மத மற்றும் மொழி வேறு பாடின்றி எல்லோரும் இலங்கையர் என மக்களை மாற்றி யோசிக்க வைத்துள்ளது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு மிக மோசமான பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு இன்று முகம் கொடுத்து வருகிறது. ஏப்ரில் 01 இல் தொடங்கப்பட்ட போராட்டம் பல மாதங்களாக நடந்து வருகின்றன. வெளிநாட்டு நாணயக் கையிருப்பு குறைந்து போனதால், குடிமக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் திணறி வருகின்றனர். எரிபொருள் நிலையங்களுக்கு வெளியே பாம்பு வரிசைகள், உணவு மற்றும் மருந்துகளுக்கான போராட்டம் நாட்டில் அன்றாடக் காட்சியாகிவிட்டது. வரிசையில் காத்திருந்தோரில் இதுவரை 19 பேர் அகால மரணம் அடைந்துள்ளார்கள்.

ஒரு நிதியமைச்சர், ஒரு பிரதமர், ஒரு சனாதிபதியை வீட்டுக்கு அனுப்பியாகி விட்டது. இது போராட்டக்காரர்களுக்கு கிடைத்த பெரிய வெற்றி. ஆனால் எதிர்ப்பாளர்கள் சனாதிபதியின் வெளியேற்றத்தில் மட்டும் திருப்தி அடைகிறார்களா? இப்போது பதில் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அவர்களும் பதவி விலகிவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

அவர்களுக்குப் விடை அளிப்பது போல பதில் சனாதிபதி அவசரகாலச் சட்டத்தை நாடுமுழுதிலும் பிரகடனப்படுத்தி மேற்கு மாகாணத்தில் மட்டும் ஊரடங்க உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதனை அடுத்து வீதிகளில் இராணுவம் கவச வாகனங்களில் நடமாடத் தொடங்கியுள்ளது. ஊரடங்க உத்தரவை மீறிய நூற்றுக் கணக்கான பொதுமக்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளர்.

இது இவ்வாறிருக்க கொழும்பின் காலி முகத்திடலில் உள்ள போராட்டத் தளத்தின் செயற்பாட்டாளர்கள் ஆறு அம்ச செயல் திட்டத்தை வெளியிட்டுள்ளார்கள். யூலை முற்பகுதியில் வரையப்பட்ட செயல் திட்டத்தில் சனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்பது முதன்மையான கோரிக்கையாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. போராட்டக்காரர்கள் முன்வைத்த கோரிக்கைகள் பின்வருமாறு.

1. சனாதிபதி கோட்டாபய இராசபக்ச உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதவி விலக வேண்டும்.

2. பிரதமர் இரணில் விக்கிரமசிங்க மற்றும் முழு அரசாங்கமும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதவி விலக வேண்டும். இதில் அனைத்து அமைச்சரவை, அமைச்சரவை அல்லாத துணை மற்றும் திட்ட அமைச்சர்கள் அடங்குவர்.

3. இராசபக்ச - விக்ரமசிங்க ஆட்சி பதவி விலகியதைத் தொடர்ந்து “மக்கள் போராட்டத்தின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நோக்கங்கள் மற்றும் வேட்கைகளுக்குத் துணைபுரியும் இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட வேண்டும்.“

4. புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் வரை, சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல், அனைவருக்கும் சமமான சட்டம், சனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள அரசியலமைப்பை சனநாயகப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5. மக்கள் இறையாண்மையை ஒப்புக்கொள்ளும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக நிறுவ வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். நியாயமான தேர்தலுக்கு உரிய நடைமுறையை ஏற்படுத்த வேண்டும்.


ஒன்றிணைந்த பிரகடனத்தின் சுருக்கம் குறித்து நேற்று அரகலய பிரதிநிதிகள் குழு ஊடகங்களுக்கு விளக்கமளித்ததுடன், மக்களின் குரல்களுக்கு செவிசாய்த்து விரைவில் செயற்படுமாறு புதிய பிரதமருக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கை தற்போது முகம் கொடுக்கும் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்றால் மதசார்பற்ற, சுதந்திரம், சமத்துவம், சட்டத்தின் ஆட்சி போன்ற சனநாயக விழுமியங்களை உள்ளடக்கும் புதிய யாப்பு வரையப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்மக்களைப் பொறுத்தளவில் வரவேற்கத்தக்கது.

நாட்டை ஆள்வோர் ஒவ்வொரு நாளும் நாட்டு மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய வேண்டும். அல்லது அந்த நாட்டின் வளங்கள் சிறிது சிறிதாக அழிந்து போகும். செங்கோன்மையின் சிறப்பை ஆராய்ந்து ஆட்சி மேற்கொள்ளாத ஆட்சியாளர் நாட்டிற்கு இன்றியமையாத உணவுப் பொருட்களையும் ஈடுபாடுடைய மக்களையும் ஒட்டு மொத்தமாக இழக்க நேரிடும்.

குடிமக்களை அன்புடன் பேணிப் போற்றும் ஆட்சியாளரின் திருவடிகளை பற்றுக் கோடாகக் கொண்டு நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார். ஆட்சி நெறிமுறை தவறாது காத்திடும் செங்கோல் சிறப்பே ஆரசைக் காக்கும். மறுபுறம் அரச அறம் சாராது நீதிநெறி செலுத்தாத மன்னன் தாழ்ந்த நிலையில் நின்று தானே கெடுவான் ஆட்சியாளரின் கொடுமைக்கு ஆளாகி அத்துன்பத்தைப் போக்கிக் கொள்ள இயலாது அழுத கண்ணீர் ஆட்சியாளரின் வன்மையை அழித்தொழிக்கும் படைக் கருவியாகும்.


பல்லாயிரம் தமிழ்மக்களது சாவுக்குக் காரணமாக இருந்த கோட்டாபய இராசபக்சாவை இன்று ஊழ்வினை தேடி வந்து பிறந்த நாட்டை விட்டே துரத்தி விட்டது!




17

**தோழனே உன் தோளோடு**

2006 ஐப்பசி 19 இல் இதயமே, உனக்குத் துணையாய் ICD (Implantable Cardioverter - Defibrillator) பொருத்தத்தப்பட்டது.



இதனை ICD என்றே அழைப்போம். துணையாய் இருப்போர் வெறும் துணையாக மட்டும் இருப்பதில்லை. உங்களை கண் காணித்துக் கொண்டும் இருப்பார்கள். இது கணவன் மனைவிக்கும், பெற்றோர்க்கும், நண்பருக்கும் கூட பொருந்தும். இதயமே, உன்னோடு இணைப்பை ஏற்படுத்திக் கொண்ட இந்த ICD மிக நுட்பமாக உன் நடவடிக்கைகளை கண்காணிப்பதையே முழு நேரத் தொழிலாக செய்து கொண்டிருப்பார். அதோடு உன் தவறான நடவடிக்கைகளை திருத்தவும் செய்வார். பொதுவாக ஒருவரை இன்னொருவர் எப்போதும் கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்பது எரிச்சலை ஊட்டுவது. இது ஒரு தொழில்கூடத்துக்கும் அல்லது எந்த ஒரு வேலைத்தலத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம்.

ஆனால் என் இதயமே, இங்கு உன் கதை வேறு. உன்னை ஆபத்திலிருந்து காப்பதுதான் புதிதாக வந்து சேர்ந்த உன் ICD நண்பரின் வேலை. உன்னைப்பொறுத்தவரை கட்டுக்கடங்காத வேகத்தோடு நீ ஓடும்போது

*‘வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க’*

என்று சிவபுராணத்தில் சொல்லியது போல உன் வேகத்தை கெடுத்து ஆளுகின்ற வேந்தனாக செயற்படுவதுதான் உன் நண்பரின் முக்கிய வேலை.

அதேபோல மிகுந்த தாமதமாய் - சோம்பல் மிகுந்து - வேகம் குறைந்து - தூங்கு நிலைக்கு போகாமல் உற்சாகம் தந்து இயங்க வைக்கும் தேவையறிந்தும் அவர் செயற்படுவார். ஆகவே அவர் தேவையோடுதான் உன்பணியில் தலையிடுகிறார் என்பதை என் இதயமே நீ புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே இதயமே நீ எரிச்சல்பட இடமில்லை. இருந்தாலும் நெஞ்சில் ஒரு இயந்திரத்தை சுமக்க வேண்டி வந்து விட்டதே என்ற கவலை எனக்கு இருக்கவே செய்தது.

பொதுவாக வாழ்க்கை முழுவதுமே முகாமைத்துவத்தைக் (Management) கொண்டது. இந்த முகாமைத்துவம் பற்றி 2000 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவம் சொல்லும் இரண்டு குறட்பாக்கள் மிக முக்கிய மானவை.

*தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்*

ஒருவரை அல்லது ஒன்றை தெரிவது பற்றி இந்தக் குறள் சொல்லுகிறது. ஒருவரை அல்லது ஒன்றை ஆராயாமல் நம்புவதும் ஆராய்ந்து நம்பிக்கை வைத்தபின் அவரை அல்லது அதனை சந்தேகப்படுவதும் தீராத துன்பத்தைக் கொடுக்கும் என்பது பொருள்.

மற்றைய குறள்

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்*

ஒரு விடயத்தை முடிக்க, இந்த இந்த வழிகளில் இவன் செய்து முடிப்பான் என்பதை ஆராய்ந்து அந்தப் பொறுப்பை அவனிடமே விட்டுவிட வேண்டும் என்பது பொருள்.

ஓர் ஆளணி முகாமைத்துவம் சார்ந்ததாக இது இருக்கிறது. அவன்கண் விடல் என்பது இதில் முக்கியமானது. அடிக்கடி தலையிட்டு - இலகு வார்த்தையில் சொன்னால் - அடிக்கடி ‘அரிகண்டம்’ கொடுக்காமல் பொறுப்பை அவனிடமே முழுமையாக விட்டுவிடவேண்டும் என்று கொள்ளலாம்.

சரி, இப்போது இந்தத் திருக்குறள் வகுப்பு எதற்காக என்று சிலர் கேட்பதும் தெரிகிறது. அங்குதான் விசயமிருக்கிறது. இந்த ICD சுமையை என் நெஞ்சிலே ஏற்றிய பின்னர் இது சரியான பொருள் தானா, சரியாய் இயங்குமா என்றொரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. இதுபற்றிய விபரங்களை மீண்டும் இதை பொருத்திய மருத்துவ விற்பன்னர்களிடம் கேட்டது மாத்திரமன்றி அது பற்றி மேலும் ஆராய்ந்தேன்.

அறிவியல் என்பது ஒன்றுக்கொன்று தொடர்பானது. ஒன்று இன்னொன்றிற்கு ஆதாரமாக இருக்கிறது. முதன் முதல் டீவிப்றிலேற்றர் (Defibrillator) என்னும் ஒரு கருவியை கண்டுபிடித்தவர் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக (Johns Hopkins University School Of Engineering) மின் பொறியியல் மாணவரான வில்லியம் கூவென்ஹூ வேன் (William Kouwenhoven) என்பவராவார். மின்னதிர்ச்சி இதயத்தில் எத்தகைய பாதிப்பினை உண்டாக்கும் என்பதனை இவர் நிறுவினார். இது இடம்பெற்றது 1930இல். ஆனால் வெளியில் எடுத்து செல்லக் கூடிய டீபிபிரில்லேட்டர் (Portable Defibrillator) உருவாக்கம் இதய சிகிச்சை நிபுணர் பிரான் பண்ட்ரிட்ஜ் (Fran Pantridge) அவர்களாலேயே 1966 இல் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் எங்கு ஆபத்து வந்தாலும் உடன் இருந்து காப்பாற்றும் வல்லமை படைத்த, நெஞ்சுக்குள் பூட்டி வைக்கும் இந்த சிறிய இயந்திரத்தை (ICD)ஐ மைக்கல் மிரோவ்ஸ்கி (Michel Mirowski) அவர்களும் அவரது மருத்துவ நிபுணர் குழுவும் சேர்ந்து 1960களில் கண்டுபிடித்ததாகவும் 1980இல் முதல் ICD வெற்றிகரமாக பொருத்தப் பட்டதாகவும் தெரிகின்றது.

நான் இப்பொழுது இவ்வாறு ICD பொருத்தப்பட்ட பல கோடி மனிதர்களில் ஒருவன் என்ற சிறப்பைப் பெற்றேன். பல இலட்சக் கணக்கானோரின் உயிர்களை இந்த சிறிய இயந்திரம் ஆண்டுதோறும் காப்பாற்றி வந்திருக்கிறது. அறிவியலின் பங்கினையும் ஆற்றல் மிகுந்த மனிதர்களின் மனிதகுல மேம்பாட்டுக்கான அர்ப்பணிப்புக்களையும் மீண்டும் நன்றியோடு நினைத்துக் கொள்ளுவோம்.

*நெஞ்சாங் கூட்டில் நீயே நிற்கிறாய்...*

என்ற பாடல் அடி நினைவுக்கு வந்தது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்



## சோமாஸ்கந்த ஈஸ்வரம்
## (நயினை முத்துக்குமாரசுவாமிகள் கோவில்)
## நயினாதீவு, யாழ்ப்பாணம்

*"கல்மனமும் கசிந்து கசிந்துருகி கண்ணீரால்*
*நல்மனதை யுடையோர்க்கு நல்லுறவு தானாகி*
*அல்லதெல்லாம் அகன்றோட ஆரமுது நினதருளை*
*நல்கிடுவாய் மலர்த்துங்க சங்கரனின் அடைக்கலமே"*

நயினாதீவுச் சுவாமிகள் இந்தியாவில் திருவண்ணாமலையில் ரமணமகரிஷி ஆச்சிரமத்தில் தங்கியிருந்த காலத்தில், வேறு பல சுவாமிகளையும் சந்தித்ததாக அடியவர்களிடம் தெரிவித்துள்ளார். சுவாமிகளின் கூற்றுப்படி, ஞான உபதேசம் பெற்ற ஞானகுரு, ரமண மகரிஷி என்றே கொள்ள வேண்டும். ஆனைக்குட்டிச்சுவாமியார் என சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனைக்குட்டி சாமியாரும் ரமண மகரிஷியுடன் தொடர்புடையவர். கொழும்பில் முத்துக்குமாரைத் தடுத்தாட்கொண்டவர் யானைக்குட்டி சுவாமிகளாக இருக்கலாம் என்பது சிலர் கருத்தாகக் காணப்படுகின்றது.

சுவாமியின் தோற்றப் பொலிவு அற்புதமானது. எப்பொழுதும் கிழக்கே பார்த்தபடி காலை மடித்து அமர்ந்திருப்பார். அனேகமானநேரம் தியான நிலையிலேயே தோற்றமளிப்பார். வெண்ணீறணிந்த திருமேனியராக விளங்குவார். நெற்றியிலே மூன்று கீறு, அதன்மேல் பெரிய பொட்டு இட்டிருப்பார். முன் வழுக்கை. பின் உச்சியில் சின்னச் சடைமுடி, தாடி, உருத்திராட்ச சின்னங்கள் அவரை அலங்கரிக்கும். நாலு முழ காவி வேட்டியை எடுத்து, அதன் இரண்டு நுனியை கழுத்தைச் சுற்றி பிடரியில் முடிச்சுப் போட்டிருப்பார். காவி வேட்டி கீழே முழங்கால்வரையே இருக்கும். வெளியே புறப்படும்பொழுது, கருஞ்சிவப்பு காஷ்மீர மென்மையான போர்வையால் போர்த்தியிருப்பார்.

சுவாமிகள் அடிக்கடி சம்புடத்திலிருந்து திருநீற்றை விரல்களில் எடுத்து சிரசிலும், உடம்பிலும் தூவிக் கொள்வார். நிறைய வெற்றிலை போடுவதால், அவரது வாயும் உதடும் சிவந்தநிறமுடையதாக விளங்கும். சுவாமிகள் பூசை செய்யும்பொழுது, கண்களை மூடியபடி பூக்களையோ, செவ்வரத்தம் இலைகளையோ கிள்ளிக்கிள்ளி தன்மேல் போட்டுக் கொண்டு, தனக்கும் பூசை செய்வார். அதன்பின்பே விக்கிரகங்களுக்கான பூசை நிகழும். "உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பு ஆலயம்" என்ற கொள்கையுடையவர்கள் சித்தர்கள். அகவழிபாட்டினையே எப்பொழுதும் மேற் கொள்வர். ஆயினும், சாதாரண நிலையிலுள்ள மக்களை நெறிப்படுத்துவதற்காக, விக்கிரக வழிபாட்டையும் மேற் கொள்வர். சுவாமியைத் தரிசிக்க வருவோரும் பூசையிலே பங்கு கொண்டு, அவருக்குப் பஞ்சாலாத்தி காட்டி வணங்குவர்.

சுவாமியைத் தரிசிக்க வருவோர் பழவகைகளைக் கொண்டுவருவார்கள். சுவாமி அவற்றை நிவேதனமாக வைத்துப் பூசை செய்து, அனைவருக்கும் வழங்குவார். அன்பர்கள் பலர் பணம் கொடுக்க முன்வந்தாலும், அதனை கையால் பெறமாட்டார். அடியவரொருவர் அதனைப் பெற்றுப் பாதுகாப்பார். ஏழை எளியவர்களின் தேவையறிந்து அவர்களுக்குக் கொடுப்பதோடு, நயினாதீவில் உற்சவம் நடைபெறும் காலத்தில் பக்தர்கள் கொடுத்த நிதியை அன்னதானத்திற்குப் பயன்படுத்துவார்.

சுவாமிகள் திரு.சண்முகரத்தினம் என்னும் அடியவரைக்கொண்டு, கங்காதரணி என்னும் தீர்த்தக்கேணியை, நயினாதீவின் தென்மேற்குக் கடலோரம் அமைப்பித்தார். பின் இக்கேணி வைரக்கல்கொண்டு கட்டுவேலைகள் செய்யப்பட்டது. இக்கேணியை ஒட்டி ஒரு தீர்த்தக் கிணறும் உண்டு. இக்கேணி கடலுக்கு அருகாமையில் இருந்தாலும், நன்னீர் ஊற்றுக் கொண்டதாக விளங்குகின்றது. நயினை நாகபூசணி அம்பாள், வருடாந்த உற்சவத்தில் இத்திருக்கேணியில் தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள்பாலிப்பாள்.

சுவாமி தனது சமாதி நிலைபற்றியும், சமாதி நடக்கும் காலம்பற்றியும் கூறி, சமாதி வைக்கும்பொறுப்பை திரு. அமிர்தலிங்கம் என்பவரிடம் ஒப்படைத்தார். இணுவில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்து, வடிவேற் சுவாமிகளின் மேற்பார்வையில், சுவாமி தான் பிறந்த பதியாகிய நயினாதீவிலேயே, சமாதி வைக்கும்படியும் கூறியுள்ளார். சமாதியில் பிரதிஷ்டை செய்வதற்காக, ஐம்பொன்னினாலான பார்வதி பரமேஸ்வரர் சிலையை சுவாமிகள் பெற்றிருந்தார்.

1948 ஆம் ஆண்டு நாகபூசணி அம்மன் ஆலய மகோற்சவம் முடிந்த கையோடு, உலகபந்தத்திலிருந்து விடுதலை பெறும் நாள் நெருங்கிவிட்டதை அறிந்த சுவாமிகள், வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடி வீட்டிற்கு வந்தார். அப்பொழுது சுவாமிகள் நோய்வாய்பட்டிருந்தார். சுவாமிகள் யோகப்பயிற்சியால் அட்டமாசித்திகளையும் அறிந்திருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தாது பிரம்மமமே அனைத்தும் என அதனையே நாடி நின்றார். சித்திகளைப்பற்றிக் கவலைப்படாது, சித்தத்தைச் சிவன்பால்வைத்து, சும்மாஇரு என்ற தத்துவத்தில் ஆர்வங்கொண்டார்.

சித்தர்களும், ஞானிகளும், அடியவர்களின் துன்பங்களைத் தாமேற்று, அதனால் நோயைப் பெற்றுள்ளனர். இதற்குச் சான்றாக ரமணமகரிஷி மற்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரைக் குறிப்பிடலாம். அவ்வாறே நயினாதீவுச் சுவாமிகளும், அடியவர்களின் இன்னல்களை ஏற்று, அமைதியாக இறைவனிடம் சித்தத்தை வைத்திருந்தார். எப்பொழுதும் தமது நோயினைப் பொருட்படுத்தாது, நிஷ்டையில் இருப்பது சுவாமிகளின் வழக்கம். சுவாமியின் நோய் தீவிரமடைந்தது. சுவாமிகள் குறிப்பிட்ட நாளில், பத்மாசனமிட்டு தியானத்தில் இருப்பதுபோல அமர்ந்திருந்து, உலக வாழ்க்கையை விட்டு விதேஹமுத்தி அடைந்தார்கள்.

வளரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபரோ, ரிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

# ஸ்காபுறோ
# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.




Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.



பனங்கருப்பட்டி



தேன் நெல்லி








காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# இவ்வார ராசிபலன்

**15-07-2022 வெள்ளி தொடக்கம் 21-07-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புண்ணியம் சேரும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். மனஅமைதி குறையும். திருமண வாய்ப்புக் கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் பொறுமை கூடும். புதிய பொறுப்பு வரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். தேவைகள் பூர்த்தியாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். செல்வாக்கு அதிகமாகும். புதிய பொருள் சேரும். பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குதூகலம் அதிகரிக்கும். நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேர்க்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,4,9,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**ரிஷபம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. கால்நடையால் லாபம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பயணத்தில் எச்சரிக்கை தேவை. ஆடம்பர சுகங்கள் கூடும். உத்தியோக மாற்றமுண்டு. புதிய தொழில் அமையும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு பெருகும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தேக ஆரோக்யம் திருப்தி தரும். மறைமுக தொல்லை நீங்கும். வழக்கு வெற்றி தரும். புதிய பொருள் சேர்க்கை உண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தொட்டது துலங்கும். காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். உடல் சோர்வு ஏற்படும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மனஅமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். அமைதியாக இருப்பது நல்லது. அதிருப்தி அதிகரிக்கும். உடல் உபாதைகள் ஏற்பட்டு விலகும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். கலைத்தொழில் உயர்வு கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். பூர்வீகச் சொத்து வரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். உறவினரால் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,4,9,1

அதிர்ஷ்ட நிறம்: யானை, நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**மிதுனம்:** மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். பேச்சில் துணிவு தேவை. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. வியாபாரம் லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. நிர்வாகச் செலவு கூடும். உடல்நலத்தில் அக்கறை வேண்டும். வாய் பேச்சில் கவனம் வேண்டும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வறுமை நிலை மாறும். பெருமைகள் கூடி வரும். திறமைகள் அதிகமாகும். திண்டாட்டங்கள் குறையும். மாற்று எண்ணம் உதயமாகும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொது பணிகளில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். பெண்களின் திறமை பளிச்சிடும். கற்பனை ஆற்றல் பெருகும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பணியார்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,7,1

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F




**கடகம்:** கர்ம வினைகள் அகலும். பழையக் கடன் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். உறவால் பண விரயம் ஏற்படும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும். முயற்சி பலன் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்வி கடன் ஏற்படும். குடும்பம் மனநிறைவு தரும். புதிய முதல்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. திறமைகள் வெளிப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். தாய்நலனில் அக்கறை தேவை. சுபக்காரிய செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம் அமையும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரம். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புகள் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,7,9,8

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G




**சிம்மம்:** புதுமைகள் நிறைந்த வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணி மாற்றம் ஏற்படும். உத்தியோகம் திருப்தி தரும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில்போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச்சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்ப நிர்வாகம் சீராகும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சுபகாரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை குறையும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். புகழ் கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். நெருக்கடிகள் நீங்கும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. கமிஷன் தொழில் திருப்தி தரும். வம்பு தும்புக்கள் ஒழியும். புதிய சொத்து சேரும். மதி நுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகை தொல்லை தரும். நோய் நொடிகள் அகலும். விபரீத எண்ணம் விலகும். தொழில்போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. குதூகலம் அதிகமாகும். வாழ்வில் வசந்தம் உண்டு. விவாத முயற்சி வெற்றித் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,6,9,2


அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R




**கன்னி:** தடங்கல் இல்லாத தனவரவு சேரும் வாரம். குழப்பங்கள் நீங்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மனஅமைதி குறையும். பொருள் சேர்க்கையுண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வணிகத்தொழில் விரிவடையும். விவேகம் அதிகரிக்கும். நூதன முயற்சி தடைப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். கலை ஆர்வம் பெருகும். உடல்சோர்வு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீ ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 7,9,3,1

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,H




**துலாம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் அளிக்கும். குடும்ப சந்தோ'ம் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனகலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பணிவு அவசியம். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமாகும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் தரும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். உணவு விடுதி லாபம் தரும். மாணவர் பாராட்டு பெறுவர். சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். புதிய தொழில் அமையும். பணவரவு தாமதமாகும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். உலோகத் தொழில் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். புதிய வாய்ப்புத் தேடி வரும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லைகள் குறையும். வீண் பழி அகலும். நிர்வாகத் திறமை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணியில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,5,9,4

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V




**விருச்சிகம்:** போட்டிகளால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விவசாயம் பலன் தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புக்கள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புக்கள் கூடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். நன்மதிப்பு கூடும். தொழில் வழித்தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மனஅமைதி கூடும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. புதிய முதலீடு தவிர்க்கவும். திக்க நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்குத் தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். பணியில் செல்வாக்கு சேரும். தொழில் மந்த நிலை காணும். சிக்கன நடவடிக்கை தேவை. தாயார் உடல்நலம் பாதிக்கும். தகுதிகள் மேம்படும். தனவரவு சீர்படும். சுயத்தொழில் லாபம் தரும். சோதனைகள் தீரும். பாதிப்புக்கள் ஒழியும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முயற்சிகள் நிறைவேறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,T

(தொடர்ச்சி _28_ பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(_27_ பக்க தொடர்ச்சி)




**தனுசு:** நீண்ட நாள் ஆசை நிறைவேறும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். வீடு தேடி வெற்றி வரும். நற்செய்தி நாடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். செயலில் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். படிப்பில் கவனம் தேவை. கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பாராட்டு கூடும். நன்மதிப்பு உருவாகும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். வேற்று மதத்தினர் உதவி சேரும். தோற்றப் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுப காரியம் கூடி வரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். புதிய உத்தியோகம் அமையும். இடமாற்றம் நன்மை தரும். ஆரோக்கியம் அபிவிருத்தி ஏற்படும். கவலைகள் அடியோடு விலகும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பெருமைகள் கூடி வரும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திரர், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J





**மகரம்:** வருத்தம் இல்லா வாழ்க்கையை சந்திக்கும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். பூர்வீகச் சொத்து சேரும். புத்தாடை ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கூடும். மருத்துவச் செலவுகள் கூடும். மன சந்தோஷம் கூடும். மற்றோரின் வாழ்த்து கிட்டும். விவசாயம் மேன்மை பெறும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். செயல்திறமை வெளிப்படும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர அகங்கம் கூடும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவியின் கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. இனிய செய்தியால் மனம் மகிழும். தொழில் சிக்கல் மறையும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அலைமோதும். விவேகம் அதிகரிக்கும். சோதனைகள் நீங்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,5,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C




**கும்பம்:** தர்ம சிந்தனைகள் அதிகரிக்கும் வாரம். மெத்தனப்போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. தொழில் லாபம் தரும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச்செலவு அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். உளுந்து சிறந்த பலன் சேர்க்கும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். தகுதிகள் உயரும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். கடன் பிரச்சனை அகலும். சுபச்செலவு கூடும். நண்பர்களால் உதவி உண்டு. அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். புதிய நட்பு ஏற்படும். திறமைகள் வெளிப்படும். வெகுமதி கூடும். தனவரவுகள் உண்டாகும். மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். எதிரிகள் தொல்லை உண்டாகும். காரியத்தடை ஏற்படும். கடன்சுமை குறையும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. திடீர் திருப்பம் ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வாகனச் செலவு ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குழந்தைகளால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**மீனம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபம், தவிர்க்கவும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் இலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். பொறியியல் துறை லாபம் தரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். புகழும், பொருளும் பெருகும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். களவுப்போனப் பொருள் திரும்ப கிடைக்கும். வங்கி சேமிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். நன்மைகள் பெருகும். கடல் கடந்த பயணம் உண்டாகும். இடமாற்றம் நன்மை தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். பிள்ளைகள் வழி செலவுகள் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,2,9,5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C

# பன்முகக் கலைஞன் கிருஷ்ணராஜா

## ப.ஸ்ரீஸ்கந்தன்



*ஓய்வறியா ஓவியர் கே.கிருஷ்ணராஜா அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கியும் லண்டன் மலையக இலக்கிய மாநாட்டை வெற்றிகரமாக செயற்படுத்தியமைக்கு பாராட்டுத் தெரிவித்தும் இலங்கையிலிருந்து பதிப்பாளர் எச்.எச். விக்ரமசிங்க அவர்கள் மலையைக இலக்கிய மாநாட்டின் சார்பில் கே.கிருஷ்ணராஜாவிற்கு விருது வழங்கிக்கௌரவித்தார். ஷோபாசக்தியின் நூல் வெளியீட்டின்போது நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஓவியர் ராஜாவின் ஓய்வறியா உழைப்பினைப்பாராட்டி விமர்சகர் மு.நித்தியானந்தன் உரையாற்றினார்.*

---

1994இல் ரொறன்டோவில் நடைபெற்ற லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடக விழாவில் இடம்பெற்ற "மன்னிக்கவும்!" நாடகத்தை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. ஒரு பகட்டான தம்பதியினர் தமது நண்பர் ஒருவரை விருந்துக்கு அழைத்து அவரது வாழ்வைக் கிண்டல் செய்யும் நாடகம் அது. ஒரே இடத்தில் இருந்தவாறும் பெரிதாக எந்த வசனமும் பேசாதும் தவிப்பு, வெறுப்பு, கோபம், ஆற்றாமை போன்ற பலவித குணாதிசயங்களை வெளிக்காட்டி பார்வையாளர்களின் பலத்த கரகோஷத்தை அள்ளிச் சென்றார் அந்த நண்பராக நடித்தவர். அந்த நடிப்புக்குச் சொந்தக்காரர்தான் ராஜா.

ராஜா, கே.கே. ராஜா என்று கலை இலக்கியப் பரப்பில் அறியப்பட்ட கனகசபை கிருஷ்ணராஜா ஓவியம், நாடகம், புகைப்படம், நூல் வடிவமைப்பு போன்ற பன்முக ஆளுமை கொண்ட கலைஞர். உயர்ந்த தோற்றம், எப்போதும் முகத்தில் தவழும் புன்சிரிப்பு, எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் சுருள் சுருளான தலைமுடி, கேட்டுக் கொண்டே இருக்கலாம் எனத் தோன்றும் இனிமையான பேச்சு, இவர் தான் ராஜா.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜா தன் ஆரம்ப கல்வியை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் பட்டப்படிப்பை களனி வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திலும் மேற் கொண்டார். அங்கு சிங்களமாணவர்கள் மட்டுமே பயின்று வந்த ஓவியமும் சிற்பமும் என்ற சிங்கள மொழி மூலமான கற்கை நெறியைப் பயின்ற முதல் மூன்று தமிழர்களில் ராஜாவும் ஒருவர். க. பவானி, சு. சிவகுமார் ஆகியோரே இவருடன் பயின்ற மற்றைய இருவருமாவர்.

ஓவியமும் சிற்பமும் ராஜாவுக்குக் கைவரப் பெற்ற கலையாக இருந்த போதும் அந்த ஆற்றலை இள வயதிலேயே இனம் கண்டு ஊக்கப்படுத்தியவர் ஹாட்லிக் கல்லூரியின் ஓவிய ஆசிரியராகப் பணிபுரிந்த மாற்கு மாஸ்டர் அவர்களே. ஈழத் தமிழர்களிடையே நவீன ஓவியக்கலையின் முன்னோடியாகத் திகழ்ந்த ஓவியக் கலைஞரான அ. மாற்குவிடம் தனது நான்காம் வகுப்பிலிருந்தே ஓவியத்தைப் பயிலும் பாக்கியத்தை ராஜா பெற்றிருந்தார். பின்னாளில் மாற்கு மாஸ்டரின் முக்கிய மாணவர்களில் ஒருவராக இவர் அறியப்பட்டார்.

"ஓவியம் என்பது படிப்பு அல்ல அது ஒரு உணர்வு. மாற்கு மாஸ்டரிடம் நவீன ஓவியங்கள் பற்றிய கருத்துருவை உணர்ந்து கொண்டேன். மாற்கு மாஸ்டர் ஒரு மகான். அவர் ரசிப்பதை நானும் ரசிக்க ஆரம்பித்தேன். அவர் ஓவியம் வரைவதைப் பார்த்து பிரமித்துப்போ வேன். படைப்புலகில் அவரும் ஒரு பிரம்மா தான். பின்நாளில் அவர் என்னுடைய ஆசிரியரென்றில்லாமல் நல்லதொரு நண்பரானார். நான் அவருடன் இணைந்து வேலை செய்யும் காலப்பகுதியிலேயே ஓவியப் பரப்பில் எனக்கான வெளியை உணர்த்திச் சென்றவர் அவர்." என்று மாற்கு மாஸ்டரின் ஆத்மார்த்த நினை வுகளில் அடிக்கடி மூழ்கிப் போவார் ராஜா.

யாழ். பல்கலைக் கழகத்தினருக்காக மௌனகுருவின் நெறியாள் கையில் மேடையேற்றப்பட்ட மஹாகவியின் "புதியதொரு வீடு"நாடகத்தின் மேடை அமைப்பு, ஒப்பனை என்பவற்றின் பொறுப்பாளராகவும் இருந்தார். 1979இல் அவைக்காற்று கலைக் கழகத்திற்காக பேராசிரியர் சி. மௌன-குரு நெறிப்படுத்திய "அதிமானிடன்" நாடகத் தின் பின்னணியிலும் ராஜாவின் கைவண்ணம் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், பேராதனையிலும் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் மேடையேற்றிய மழை, ஒரு பாலை வீடு, யுகதர்மம் போன்ற நாடகங்களுக்கு மேடையின் பின்னணியில் ராஜாவின் பங்களிப்பு பளிச்சிட்டு நின்றது. அவர்களது கனடா நாடக விழாவின் போது கையில் கிடைக்கின்ற பொருட்களை வைத்துக்கொண்டு மேடைக்கு வேண்டிய உபகரணங்களை அவர் அழகாகச் செய்ததை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

கலைஞர் வட்டத்தின் நாடகங்களுக்குப் பின்னர் 1979இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் மேடை யேற்றிய அயனஸ்கோவின் "இடைவெளி" என்ற நவீன நாடகத்தில் நடித்ததன் மூலம் நடிப்பில் இவர் புதிய பரிமாணத்தைத் தொட்டார். இந் நாடகத்தில் நிர்மலா, ஜெரால்ட் ஆகியோரும் நடித்திருந்தனர்.

1988இல் இலண்டனுக்குக்குப் புலம்பெயர்ந்த பின்னர் இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் மேடையேற்றிய யுகதர்மம், சம்பந்தம், பாரத தர்மம், ஐயா எலெக்சன் கேட்கிறார், பலி, இரு துயரங்கள், பார்வைக் கோளாறு (தனி நபர் நடிப்பு), மழை, மன்னிக்-கவும், முகமில்லாத மனிதர்கள், பெயர்வு, எரிகின்ற எங்கள் தேசம், இடைவெளி, தரிசனம், காத்திருப்பு ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்து.

# 25ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

(நவக்கிரி, புத்தூர்)



விடுதலை வேங்கையோடு வீரமிகு போராளியாய்
விண்ணில் மறைந்த மாவீரனே!
மண்ணில் நீர் வாழ்ந்த காலம் குறைவே – ஆனாலும்
சோதனைகளையும் வேதனைகளையும்
சாதனைகளாக்கி அந்த சாதனைகளின்
சாம்ராச்சியத்தின் சரித்திரம் – நீர்
தேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவன் நீர்
வித்திட்டவன் வித்தாகி போன
வித்தைதான் என்ன!
மண்ணுக்காய் மாண்டவர் என்பதனால் நிறைவு எமக்கு
மீண்டும் வருவீர் என நாம் ஏங்குகின்றோம்
ஈரவிழிகளுடன் பதினெட்டு ஆண்டாய்....

தோற்றம் 29-12-1972 மறைவு 19-07-1997

ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்
(416) 888-1128, (905) 205-1070

### தமிழ்ப்பூங்கா

பாடும் குயில் பரிசு பெற்றோர் விபரம் - 10-07-2022

பாடும் குயில் அரங்கில் பங்கேற்றுச் சிறப்பு விருது பெறுவோர்:

| பிறந்த ஆண்டு | வெற்றிபெற்றவர் | இடம் |
|---|---|---|
| 2010 | தானியா சதிஸ்கரன் | 1 ஆம் இடம் |
| 2010 | அரன் அசோக் | 2 ஆம் இடம் |
| 2011 | மேகனா யோகசந்திரன் | 1 ஆம் இடம் |
| 2011 | அகரன் சாந்தநாதன் | 2 ஆம் இடம் |
| 2011 | ஆகாஷ் பிறேம்நாத் | 3 ஆம் இடம் |
| 2012 | ஆக்ஷ்ஷமனன் ஷயந்தன் ஷாயி | 1 ஆம் இடம் |
| 2012 | ஆயுஷ்மனன் ஷயந்தன் ஷாயி | 1 ஆம் இடம் |
| 2012 | ரக் ஷன் கிருஷ்ணகுமார் | 3 ஆம் இடம் |
| 2012 | ஆதுளன் அனுரா | 3 ஆம் இடம் |
| 2013 | ஆதவன் மாதவன் | 1 ஆம் இடம் |
| 2013 | சாமந்தி தினேஸ் | 2 ஆம் இடம் |
| 2013 | நேமிகா அரவிந்தகுமார் | 3 ஆம் இடம் |
| 2014 | அஸ்னிகா ரமேஸ் | 1 ஆம் இடம் |
| 2014 | றோமிஷா இளங்கீதன் | 2 ஆம் இடம் |
| 2014 | ஆரணி குலசெல்வம் | 3 ஆம் இடம் |
| 2015 | பைரவி மாதவன் | 1 ஆம் இடம் |
| 2015 | ஆதரன் மனோரஞ்சன் | 2 ஆம் இடம் |
| 2015 | நிஷோக் இளங்கீதன் | 3 ஆம் இடம் |
| 2016 | ஹம்ஷரா யோகானந் | 1 ஆம் இடம் |
| 2016 | ஆதனன் அனுரா | 2 ஆம் இடம் |
| 2016 | ஹரீஸ் கேதீஷ் | 3 ஆம் இடம் |
| 2017 | கிஷரா யோகானந் | 1 ஆம் இடம் |
| 2017 | அஜினா அகிலன் | 2 ஆம் இடம் |
| 2017 | புகழ் சதானந்தன் | 3 ஆம் இடம் |
| 2018 | தானியா தயாபரன் | 1 ஆம் இடம் |
| 2018 | அபூர்வன் மனோரஞ்சன் | 2 ஆம் இடம் |
| 2008 | அஞ்சனி குலசெல்வம் | 1 ஆம் இடம் |


நீங்கள் குடியிருக்கும் அடுக்குமாடி வீட்டின் பழுதுகளை உங்கள் கட்டிட சொந்தக்காரர் இன்னும் சரி செய்யவில்லையா?

நாங்கள் உதவ முடியும்



உங்கள் வேண்டுகோளை இன்றே சமர்ப்பிக்கவும்:
mississauga.ca/MARC
அல்லது அழைக்கவும் 311

Mississauga Apartment Rental Compliance (MARC)
Mississauga

# ஜீவன் முக்தி 587

*(சென்ற வார தொடர்ச்சி...)*

கிருஷ்ணரின் உடல் மிகச் சரியாக ஞானத்தைத் தாண்டிய ரசத்தை தீக்ஷையாக தருமளவிற்குத் தயாராக இருந்தது. இதுபோன்ற அவதார புருஷர்கள் மலர்வது எப்போதாவது நிகழும் ஒன்று.

கிருஷ்ணருடையது ஞானத்தைத் தாண்டிய ரசம். இரண்டு பேரும் ஒன்று என்று உணர்ந்தாலும்கூட சீண்டிப் பார்ப்பதிலே ஒரு ஆனந்தம் விளையாடிப் பார்ப்பதிலே ஒரு ஆனந்தம்.

கிருஷ்ணனின் லீலையைப் புரிந்து கொள்ள விரும்பி பாகவதத்தைப் படித்தால் கண்கள் நிறைந்து உணர்வே மலர்ந்துவிடும். காரணமில்லாத விளையாட்டு எதை வர்ணிப்பது எதை விடுவது என்றே தெரியவில்லை. அந்தச் செயல்களை வர்ணிப்பதுகூட சாத்தியம் இல்லை. அந்த உணர்வைப் பற்றிச் சொன்னேன் அவ்வளவுதான்.

செயல்களை வர்ணிப்பதுகூட சில மனிதர்களுக்குப் புரியாமல் போகலாம்.

கிருஷ்ணன் செய்த செயல்களைப் பார்த்தோம் என்றால் சில நேரம் பகுத்தறிவுக்குப் புரியாமல்கூட போகலாம். ஆனால் அந்த உணர்வை உள்வாங்கிக்கொள்ளுங்கள். அப்போது அந்தச் செயலுடைய மகத்துவம் புரியும்.

உணர்வு ரீதியாக ராசலீலையை உள்வாங்கினாலே அதற்கான தீக்ஷை உங்களின் உணர்வுக்குள் நிகழ்ந்துவிடும்.

இந்த ஞானத்தைத் தாண்டிய ரசத்தை நேரடியாக அடைந்தால் அதைத்தான் பக்தி என்கிறோம். முக்தியடைந்து அந்த ரசத்தை அடையலாம் நேரடியாகவும் அடையலாம்.

தியானம் - ஞானம் - தவம் என்று படிப்படியாக ஏறி முக்தியைப் பெற்று பக்தியைப் பெறுபவர்கள் பக்தர்கள். நேரடியாகப் பக்தியில் கரைபவர்கள் கோபிகைகள்.

## உன்னத உறவு

- உங்களின் புதுப்புது பரிமாணங்களைத் திறப்பதே உறவு
  Opening your new dimensions is what is 'relationship"
- உணர்வையே கரைக்கும் உறவு, குரு-சிஷ்ய உறவு
  Guru-disciple relationship,The relationshipThat meltsThe very consciousness
- குரு சிஷ்ய உறவு மலர்ந்தால் வாழ்வே மலரும்
  WhenThe Guru-disciple relationship flowers, life itself flowers
- உங்கள் வாழ்க்கையே மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான்
  Your life itself is just a doll"s play
- அன்பைக் கண்டால் பயமா? ஆனந்த அலைக்கு அணை கட்டாதீர்!
  Afraid of love? Don"t raise a wall for Bliss waves
- அன்பின் உச்சம் கண்டு பயப்படக்கூடாது
- உணர்வை மலர்த்துவது குரு சக்தியே
  It isThe Guru"s energyThat makesThe consciousness to flower
- மகோன்னத தீக்ஷை
  The ultimate initiation

## உன்னத உறவு

எல்லா உறவுகளுமே நம்மை மீண்டும் மீண்டும் பந்தத்திற்குள்ளே ஆழ்த்தும் பலம் வாய்ந்தது.

ஆனால் இந்தக் குரு-சிஷ்ப உறவு மட்டும் நம்மை மீண்டும் மீண்டும் சுதந்திரத்திற்குள் ஆனந்தத்திற்குள் அழைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது.

உறவு என்றால் என்னவென்று ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் மீது அவர்களுடைய சாயலைப் பதிப்பதனால் உங்களுக்கே உங்களைப் பற்றித் தெரியாத பலபரி மாணங்களை உங்களுக்குப் புரிய வைக்கிற நபருக்குத்தான் 'உறவு' என்று பெயர். உறவிற்கு அவ்வளவு பெரிய பலம் உண்டு.

## உங்களின் புதுப்புது பரிமாணங்களைத் திறப்பதே உறவு

எல்லோருமே திரும்பத் திரும்ப செய்கிற ஒரு வேலை "எங்கே ஏமாந்து விடுவேனோ?" "எங்கே இவரிடம் ஏமாந்து போய்விடுவோமா?" என்று நம்மை நாமே பாதுகாத்துக் கொள்கிறோம். இது நாம் எல்லோருமே செய்கிற ஒரு வேலைதான்.

ஆனால் திடீரென்று பார்த்தால் யாரோ ஒரு ஆணுக்காக யாரோ ஒரு பெண்ணுக்காக உங்களுடைய பொக்கிஷங்களையும் உங்களுடைய வாழ்க்கை முழுவதும் சேர்த்து வைத்த பணம் மட்டும் இல்லை உங்கள் உணர்வையேகூட திறக்கத் தயங்க மாட்டீர்கள் அதுதான் மிகப்பெரிய விஷயம்.

நன்கு புரிந்துகொள்ளுங்கள் பொக்கிஷ த்தைக்கூட சில சமயம் திறந்து விடுவோம்.

நீங்கள் எப்படி உங்களை உலகத்திற்குக் காட்டுகிறீர்களோ அது போலவே காட்டிக்கொண்டு இல்லாமல் இரகசியம் ஒளிவு மறைவு என்பது இல்லாமல் அதாவது திருத்தம் செய்யாமல் உங்களுடைய குணத்தை உங்கள் நிஜமான பரிமாணத்தைக் காட்டுகிற துணிவு! இன்னொரு ஜீவனிடம் தம்மை முழுமையாய்த் திறப்பது அதுதான் காதலுடைய அடையாளச் சின்னம்.

மற்றவர்களுக்கு எல்லாம் காட்டாத உங்கள் குணத்தையே ஒருவரிடம் திறந்து காட்டுகிறீர்கள். அதாவது இந்த Personality-ஐத் திறந்து காட்டுவதுதான் மிகப் பெரிய செயல்.

உங்களுடைய பர்ச னாலிட்டியை... குணத்தைத் திறந்து காட்டுவதென்றால் யாரிடம் திறந்து காட்டுவீர்கள்? யார் உங்களை அப்படியே ஏற்றுக்கொள்வார்களோ பரிமாணத்தை ஒரு காதலன் திறந்து வைத்து விடுவான.

இவர்களையெல்லாம் தாண்டி உங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆழமான பரிமாணமான கடவுளை திறந்து வைப்பவரே "குருநாதர்" என்றழைக்கப்படுகிறார்.

## உணர்வையே கரைக்கும் உறவு குருசிஷ்ய உறவு

இத உறவில் மட்டும்தான் இதற்கு மேல் அடைவதற்கு ஒன்றுமில்லை என்ற கரைந்து விடுதல் நிகழும். அதுதான் அந்தக் குரு-சிஷ்ய உறவின் உச்சம். குரு-சிஷ்ய உறவின் தன்மை.

உங்கள் உணர்வு கரைந்து போய் விடும்பொழுது காணாமல் போய் விடும்பொழுது நடப்பதுதான் ஞானத்தைத் தாண்டிய ரசம்.

அதனால் குரு-சிஷ்ய உறவிற்கு மீறி குரு-சிஷ்ய உறவைத் தாண்டி உங்களுக்குள் நடப்பதற்கு எதுவுமில்லை. ஏனென்றால் அதுதான் வாழ்க்கையில் மிகச் சிறந்த நிகழ்வு.

பல உறவுகள் சேர்ந்துதான் நீங்கள் என்கிற பட்டைதீட்டப்படாத வைரத்தை பட்டை தீட்டுகிறது. நீங்கள் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம் மாதிரி வைரம் போன்று பட்டை தீட்டப்படுவது என்பது பல்வேறு உறவுகள் உங்கள் மேல் உராயும்பொழுது நிகழ்வது. உராய்ந்து உராய்ந்து உன்னத நிலைக்கு எடுத்துச்செல்வதனால்தான் அதற்கு உறவு என்று பெயரோ என்னவோ!

உராய்ந்து உராய்ந்து...
உங்களை
உன்னத நிலைக்கு
எடுத்துச் செல்வதனாலேதான்
அதற்குப் பெயர் உறவு.

அது உங்களுடைய ஒவ்வொரு பரிமாணத்தையும் மலரச் செய்யும்.

உதாரணமாக தாய்மை என்கிற பரிமாணத்தை மலரச் செய்வது உங்களுடைய மகன் அல்லது மகள் என்கிற உறவு.

தனியாக இளம் பெண்ணாகச் செல்லும்போது நாயைப் பார்த்து பயப்படும் ஒரு இளம் பெண் அவளுடைய குழந்தையோடு செல்லும் பொழுது சிங்கம் எதிர்பட்டால் குழந்தையைக் காப்பதற்காக அதை எதிர்த்து அடிக்கத் துவங்குவாள். முறத்தாலே புலியையும் விரட்டுவாள் என்பார்களே அதுபோன்று அதே இளம் பெண் துடிப்போடு இயங்குவாள்.

எங்கிருந்து வந்தது அந்தத் தைரியம்? நேற்றுவரை தனியாகப் போக பயந்த இளம் பெண்ணாக இருந்தவள் அப்போது நாய்கூட அவளை எளிதில் மிரட்டியது.

ஆனால் அவளுடைய குழந்தையைக் தாக்க புலியே வந்தாலும் அதைக்கூட விரட்டும் சக்தியோடு எதிர்கொள்வாள்.

உறவுகளைப் பற்றிய ஒரு ஆழமான சத்தியத்தை இங்கே உணர்த்துகிறோம்.

காதலன்-காதலி கணவன்-மனைவி என்கிற ஒவ்வொரு உணர்விற்கும் ஒவ்வொரு உறவிற்குள்ளும் நுழைவதற்கு முன்பும் அகங்காரமில்லாமல். தளர்வாக இருக்கிற மன உணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு.

உங்களுக்குள்ளே செய்ய வேண்டிய நிரந்தரமான மாற்றத்தைச் செய்து வைக்க வேண்டும். நிரந்தரமான மாற்றத்தைச் செய்து விட்டுப் "போவதற்காகத்தான் அந்த உறவுகளையெல்லாம் நம்முடைய வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கிறோம். இல்லையென்றால் அந்த உறவுகள் எல்லாம் வீண்.

கணவனுக்கும் மனைவிக்கும் நடுவில் இருக்கும் உறவு ஒருவரை ஒருவர் மலர வைத்து உன்னதமான நிலையை அடைய வேண்டும். அகங்காரமில்லாத நிலையை அவர்களுக்குள் காட்ட முடியவில்லை வெறுமனே உடலால் மட்டும்தான் சம்பந்தம் என்றால் அதற்கு "உறவு" என்கிற அழகான வார்த்தையைத் தயவு செய்து உபயோகப்படுத்த வேண்டாம்.

அது உறவு அல்ல.

உண்மையான உறவு என்னவென்றால் உணர்விலே ஏற்படுத்துகிற ஆழமான மலர்ச்சி.

## குரு சிஷ்ய உறவு மலர்ந்தால் வாழ்வே மலரும்

உங்களைச் சுற்றிச் சேருகிற நண்பர்கள் நட்பு என்கிற பரிமாணத்தை மட்டும்தான் வெளிப்படுத்த வைப்பார்கள்.

உங்களைச் சுற்றிச் சேருகிற உங்களுடைய குழந்தைகள் உங்களுடைய தாய் என்ற பரிமாணத்தை மட்டும்தான் வெளிப்படுத்த வைப்பார்கள்.

உங்களைச் சுற்றிச் சேர்கிற தாய் தந்தையர்கள் அல்லது பெரியோர்கள் உங்களைக் குழந்தை என்கிற பரிமாணத்தை மட்டும்தான் வெளிப்படுத்த வைப்பார்கள். ஆனால் குரு எல்லாத் திசைகளில் இருந்தும் உங்களைச் சுற்றிச் சூழ்வதனாலே இந்த எல்லாப் பரிமாணத்தை மட்டும் அல்லாமல் இதையெல்லாம் தாண்டிய முழுமைத்தன்மை உங்களை நீங்களே பிரதிபலித்துக்கொண்டு உங்களுக்குள் நீங்கள் கரைகிற பரிமாணத்தையும் வெளிப்படுத்த வைப்பார். அந்தப் பரிமாணத்தைத்தான் மஹாபாவம் ஞானம் என்று சொல்கிறோம்.

உங்களைச் சுற்றி சேருகிற உங்களுடைய குழந்தைகள் உங்களுடைய வாத்சல்ய பாவத்தை வெளிப்படுத்துவார்கள் உங்களைச் சுற்றிச் சேருகிற பெற்றோர்கள். உங்களுக்குள் இருக்கிற மாத்ரு பாவத்தை வெளிப்படுத்துவார்கள்.

உங்களைச் சுற்றி சேருகிற தாஸர்கள் தொண்டர்கள் உங்களுக்குள் இருக்கிற தலைவன் என்ற தாஸ பாவத்தை வெளிப்படுத்துவார்கள்.

உங்களைச் சுற்றிச் சேருகிற ஒவ்வொருவரும் உங்களுக்கே தெரியாத ஒவ்வொரு பரிமாணங்களை வெளிப்படுத்துவார்கள்.

ஆனால் குரு உங்களை எல்லாத் திசைகளிலும் சுற்றிச் சூழ்வதனாலேயே உங்களுக்குள்ளே மலராது இருக்கிற உங்களுக்குள்ளே உணராது இருக்கிற எல்லாப் பரிமாணத்தையும் உணர்த்துவது மட்டும் அல்லாமல் "மஹாபாவம்" எனப்படும் மிகப்பெரிய உணர்வு நிலையையும் "உங்களுக்குள் நீங்களே கரைதல்" என்கிற மிகப்பெரிய உணர்வு நிலையையும் உங்களுக்குள் உணர்த்துவார்.

உங்களுக்குள்ளும் மலர வைப்பார். என்னென்ன மாற்றங்களெல்லாம் அந்தக் குரு-சிஷ்ய உறவினால் மலருகிறது என்று கணக்கேபோட முடியாது. கணக்குப் போட்டு அவற்றை நம்மால் உணர்ந்து கொள்ள முடியாது.

எரிகிற ஒரு விளக்கு எரியாத விளக்கிற்குள் என்ன மாற்றம் நிகழ்த்தியது என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

எரிகிற விளக்கிலிருந்து எரியாத விளக்கிற்கு அந்த ஒளி பரவுகிறது. ஒளி பிடித்துக் கொள்கிறது. இப்போது அந்த எரியாத விளக்கிற்குள்ளே என்ன மாற்றம் நிகழ்ந்தது என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

குரு-சிஷ்ப உறவிற்குள்ளே இணைந்த பிறகுதான் விளக்கு என்ற வார்த்தையையே உபயோகம் செய்ய முடியும். அதுவரை விளக்கிற்கும் விளக்குமாறுக்கும் வித்தியாசம் இருக்காது. நெருப்பு பிடித்த பிறகுதான் அது விளக்கு என்கிற வார்த்தைக்கே தகுதியாகிறது.

எப்படி அந்த எரியாத விளக்கு எரிகிற விளக்காகிய குருவிடம் சென்று திரும்பிய பிறகு என்ன மாற்றம் நடந்தது என்று சொல்ல முடியாதோ...

அதுபோல் உணர்வினாலே குருவால் தொடப்பட்டவர்கள் உணர்வாலே குரு சக்தியோடு இணைந்தவர்கள் உணர்வாலே குருவை உணர்ந்தவர்கள். அவர்கள் உணர்விற்குள்ளே என்னென்ன மாற்றம் நடக்கிறது என்று ஒன்றுமே சொல்ல முடியாது.

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party - Family Get-together
- Birthday Party - Graduation Party
- Bridal Shower - Holiday Party
- Children's Party - Religious Ceremonies
- Engagement Party - Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON
CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


GEMS CANADA CELEBRATING
25th ANNIVERSARY
எல்லாவற்றிற்கும் முடிவு
சமீபமாயிற்று
1 பேதுரு 4:7
15-17
JULY, 2022
SPECIAL MEETINGS
@ TORONTO
Friday - Saturday
09:30 am - 11:00 am
11:30 am - 01:00 pm
Bro AUGUSTINE
Jebakumar
Friday - Sunday
06:30 pm
For Contact: 647-621 23 82 / 416-509 96 55 / 416-824 56 87
VENUE : MIRACLE FAMILY TEMPLE
1100 Bellamy Rd North,
Scarborough, Toronto, ON M1H 1H2.


Chapel
Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE
Serving the Tamil Community of Greater Toronto
உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.
கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.
உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.
CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759
இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
Pre-Arranging – A Wise Choise
FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death
EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்




உதயம் 1371 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 15, 2022

## கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அறிமுகம் செய்யப்பெற்ற கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்"



கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அறிமுகம் செய்யப்பெற்ற கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ் இலங்கையின் தலைநகராம் கொழும்பில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் கடந்த 12-07-2022 செவ்வாய்க்கிழமை மாலை கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" அறிமுகம் செய்யப்பெற்றது.

முன்னாள் வவுனியா அரசாங்க அதிபரும், இலங்கை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளரும் கலை இலக்கிய ஆர்வலருமான திரு. "உடுவை" தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதில் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் வி. தேவராஜ் மற்றும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோர் துணை நின்றனர்.

கனடாவிலிருந்து உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் நேரடியாக இந்த விழாவில் கலந்து கொண்டார்.

(உள்ளே விபரமான செய்தி...23 பக்கத்தில்)

## கனடா சு. இராசரத்தினம் அவர்களை பாராட்டிய தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அன்பில் பொய்யாமொழி அவர்கள்



தற்போது தமிழ் நாட்டிற்குச் சென்று அங்கு தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பெற்ற கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கொண்ட கனடா வாழ் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களின் தமிழ் மொழி கற்பித்தல் சார்ந்த பணிகளை பாராட்டியுள்ளார் தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அன்பில் பொய்யாமொழி அவர்கள்.

சென்னையில் உள்ள அமைச்சரின் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது திரு இராஜரத்தினம் அவர்கள் அமைச்சர் அனபில் பொய்யாமொழி அவர்களுக்கு தனது நூல் ஒன்றைக் கையளிப்பதைக் காணலாம்.

## மொன்றியால் வாழ் கௌரீஸ் வழங்கிய "விடியலைத் தேடி" இன்னிசை நிகழ்ச்சியும் இசைத் தட்டு வெளியீடும்



கனடா-மொன்றியால் வாழ் இளம் பாடகரும் தாயகத்தில் வாழும் கண்பார்வையற்ற சிறார்களுக்கும் உதவும் வகையில் செயற்படுகின்றவருமான கௌரீஸ் தனது தாயாருடன் இணைந்து வழங்கிய "விடியலைத் தேடி" இன்னிசை நிகழ்ச்சியும் இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வும் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

(உள்ளே விபரமான செய்தி... பக்கத்தில்)

## Doly Begum MPP appointed as Deputy Leader of the Ontario's Official Opposition

## ஒன்றாரியோ மாகாண பிரதி எதிர்க்கட்சித் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பெற்ற எம்பிபி டொலி பேகம்



ஒன்றாரியோ மாகாணத்தின பிரதி எதிர்க்கட்சித் தலைவியாக ஸ்காபுறோ தெற்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவருமான எம்பிபி டொலி பேகம் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்.

மேற்படி பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றதை பாராட்டும் வகையில் உதயன் ஆசிரிய பீடம் அவரோடு தொடர்பு கொண்டு இந்த நியமனம் தொடர்பாக உரையாடியபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

நீங்கள் எங்கிருந்து வந்தாலும் சரி, என்ன மொழி பேசுகின்றவருமக இருந்தாலும் சரி. உங்களுக்கு நியாயம் மற்றும் வெற்றிக்கான வாய்ப்பு உள்ள ஒரு மாகாணத்தை உருவாக்க நான் தொடர்ந்து பணியாற்றுவேன்." சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற தொழில் வல்லுநர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்கள் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடன் ஒன்ராறியோவிற்கு வரும் அனைவருக்கும் ஆதரவாக தொடர்ந்து நிற்பேன் என்றும் உறுதியளிக்கிறார்.

ஸ்காபரோ தென்மேற்கு மாகாணத் தொகுதியைப்பரதிநிதித்துவம் செய்யும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் டோலி பேகம் சமீபத்தில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்றாறியோவில் வங்காளதேச வம்சாவளியைச் சேர்ந்த முதல் துணைத் தலைவர் பேகம், தனது அலுவலகத்தை dbegum-co@ndp.on.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் அணுகலாம் என்றும் தெரிவித்தார்.

## வவுனியா வாழ் எழுத்தாளர் மைதிலி தயாபரன் அவர்களுக்கு இலங்கைச் சிறப்பிதழ் பிரதியொன்ற கையளித்த "உதயன்" லோகேந்திரலிங்கம்



கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" 29-05-2022 அன்று வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்கள் படைப்பாளிகள் என பலருக்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்கள் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளித்து வருகின்றார்.

அந்த வரிசையில், தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் வவுனியா வாழ் எழுத்தாளரும் தொடர்ச்சியாக சிறுகதை மற்றும் நாவல்களை எழுதி நூல்களையும் வெளியிட்டுள்ளவரும் இலங்கை மின்சார சபையின் மின்சாரப் பொறியியலாளருமான திருமதி மைதிலி தயாபரன் அவர்களுக்கு. வவுனியாவில் உள்ள அவர் இல்லத்தில் இலங்கைச் சிறப்பிதழ் பிரதியொன்றை கையளிப்பதைக் காணலாம்..

படங்களில் வீரகேசரி முன்னாள் வார இதழ் பிரதம ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான வி. தேவராஜ் மற்றும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை உப பீடாதிபதியுமான ந. பார்த்திபன் அவர்கள் ஆகியோர் கூட நிற்பதையும் காணலாம்.




## ஓடிய கோத்தாவும் ஓட முடியாத ரணிலும் யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்




நாட்டு மக்களின் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல், நள்ளிரவில் வெளியேறினாலும் கோத்தாபய ராஜபக்ச வெளியிறானலும், கொழும்பில் போராட்டங்கள் ஓய்வதற்கான அறிகுறிகள் ஏதும் காணப்படவில்லை.

இதனிடையே ஜனாதிபதி நாட்டில் இல்லாததால் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். தான் நாட்டில் இல்லாததால் ஜனாதிபதி இந்த நியமனத்தை அரசியல் யாப்பின் பிரிவு 37.1 கீழ் செய்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

